பஞ்ச பூத ஸ்தலங்கள் [422-492]

பழமுதிர் சோலை [494 - 511]

பஞசபூத ஸ்தலங்கள்

எண்	பாடல்	எண்	பாடல்
	காஞ்சீபுரம		**திருவானைக்கா**
422	அதிமதங் ககக	441	அனித்தமா
423	அறிவிலாப	442	ஓலமறைக
424	அற்றைக	443	குருதிபுலாலெ
425	எனக்குச	444	நாடித்தேடி
426	கருமமான	445	பரிமள மிகவுள
427	கறையிலங்		**திருவருணை**
428	கனிதருங்	446	அருக்கார்
429	கொத்தார்	447	அருதுமாவா
430	சீசி முப்புர	448	இமராஜனி
431	செறிதரும	449	இரவியுமதி
432	தலைவலையத்து	450	இரவுபகற்
433	நச்சரவ	451	இருவர மயலோ
434	படிறொழுக்க	452	இருவினையஞ்ச மல
435	புரைபடுஞ்	453	இருவினைபூண்
436	புனமடந்தை	454	கடல்பரவு
437	பொக்குப்பை	455	கயல விழித்தேன்
438	மககடகு	456	கரிமுகக்
439	முட்டுப் பட்டு	457	கருணைசிறிது
440	வமபமரச	458	குமரி காளி
		459	குழவியுமாய்

பஞ்சபூத ஸ்தலங்கள்

எண்	பாடல்	எண்	பாடல்
	திருவருணை (contd)		சிதம்பரம் (contd)
460	காணாத தூர	476	இருளுமோரா
461	கீத விநோத	477	எழுப்புத் தோல
462	சிவ மாதுடனே	478	எழுகடல மணலை
463	செய செய அருணா	479	கடிமுண்ட
464	தமர குரங்களு	480	கனக சபை
465	பரியகைப் பாசம்	481	காய மாய வீரு
466	புலையனை	482	காவியுடுத்து
467	வேதக விரோத	483	குகனெ குருபரனே
468	வலிவாத பித்த	484	ஞகத் தருண
469	விதியதாகவெ	485	சுடரனைய
470	விரகொடு வளை	486	தறுகணனா
	திருக்காளத்தி	487	நஞ்சினைப்
471	சரக்கேறி	488	நாடா பிறப்பு
472	கிரத்தான	489	பரம குருநாத
473	பங்கயனார	490	மனமே உனக்கு
	சிதம்பரம்	491	வந்து வந்து வித
474	அவகுண	492	வாத பித்தமொ
475	இருவினையின் மதி	493	விடுங்கைக்

பழமுதிர சோலை

எண்	பாடல்	எண்	பாடல்
494	அகரமுமாகி	498	சீலமுள தாயர
495	ஆசை நாலு	499	தலைமயிர்
496	கருவாகிய	500	துடிகொணோய்
497	காரணமதாக	501	வாதினையடர்ந்த

திருப்புகழ் பத விளக்கம்

		பக்கம்
1	எட்டுத் திக்கர்	173
2	முப்பத்திரண்டு அறங்கள்	173
3	சூரியப் புவிக்கேறி	173
4	பஞ்ச கோசங்கள்	174
5	புனித சங்கம் - பாதசஜன்யம்	174
6	சிவ சக்திகள் நான்கு	174
7	சரண கஞ்சத்திற் பொற்கழல கட்டிய தலை	175
8	சரியை, கிரியை, யோகம், ஞானம்	175
9	ஆறு அங்கங்கள் - வேத புருஷனுக்குரிய	176
10	உதய மரணமில் பொருள்	176
11	போத மலர் எட்டு	176
12	முத்தர்கள் நான்கு வகை	177
13	இருளும் ஞா கதிர் / அந்தி பகல் / கேவல சகலம் ...	177

14 எட்டிரண்டு - தச காரியங்கள் 177
15 எட்டிரண்டுமுருவாதி - 16 திருவுருவ வகைகள் ... 177
16 96 தத்துவங்கள் 178
17 36 தத்துவங்கள் 179
18 யோக பேத வகை எட்டு - அஷ்டாங்க யோகம் ... 179
19 ஆறுமுகம - ஆதியோடும் அந்தம் ஆகிய நலன்கள் ... 179

(422) கல்யாணி (16) (-) ஆதி - உகன

அதி மதம் கக்கப் பக்கம் உகக்குஞ்
சரி தனைத் தக்கச் சிக்கென, நெக்(கு) அங்கு
அணைதரும், செச்சைப் பொற்புயன் அத்தன் குறவாணர்

அடவி அம் தத்தைக(கு) எய்த்து உருகிச் சென்று,
அடியணிந்து இட்டப்பட்டு மயற கொள்
அயர்பவன், சத்திக் கைத்தலவ(ன்), நித்தன், குமரேசன்

துதி செயும் சுத்தப் பத்தியர் துக்கம்
களைபவன், பச்சைப் பக்ஷி நடத்துந்
துணைவன் என்று ஆசித்து இச்சைதணித்(து) உன்புகழ்பாடி
சுருதியின் கோதப் பத்தியும், முற்றும்,
துரியமும் தப்பித் தத்வம் அனைத்துந்
தொலையும் அந்தத்துக்கு அப்புறம் நிற்கும் படி பாராய்

கதி பொருந்தக் கற்பித்து நடத்துங்
கனல் தலம் புகுச் சகரம எடுக்கும
கடவுளும், பத்மத் தச்சனும, உட்கும்படி மோதி

கதிரவன் பற் குற்றிக், குயிலைத் திண
சிறகு அரிந்து, எட்டுத் திக்கர் வருக்குங்
கடகமும் தட்டுப் பட்டு அழியக் கொன்று, அபிராமி

(422) மதம், மகிழ்ச்சி, கக்க : வெளிப்படுதல் ; பக்கம் : பக்ஷம் - அன்பு

நிரம்ப மகிழ்ச்சியை வெளிவிடும் (தரும்) அன்பும், விரும்பிக் கனி கூரும் - தேவசேனையின், அழகாயுள்ள தனங்களும் (கொங்கைத் தைக்க) அழுத்தமாகப் பதியும்படி (உளம்) நெகிழ்ந்து, அங்கே அணைந்த, வெட்சிமாலை தரித்த அழகிய திருப்புயங்களையுடையவன், பெரியோன், குறவர் (வாழும்)

காட்டில் இருந்த அழகிய கிளி போன்ற வள்ளியை நினைத்து இளைத்து உருகிச் சென்று, அவளுடைய அடியிற் பணிந்து, இச்சைப் பட்டு (ஆசை பூண்டு) மோகம் கொண்டு தளர்பவன், சக்திவேலைத் திருக்கரத்திற் கொண்டவன், என்றும் உள்ளவன், குமரேசன்

துதி செய்கின்ற, பரிசுத்தமான பக்தி பூண்ட அன்பர்களுடைய துக்கத்தை நீக்குபவன், மயிலை நடத்தும் உதவியாளன் என்றெல்லாம் கூறி அருச்சித்து, என் ஆசையை நிறைவேற்றி உன் புகழைப் பாடி

வேதங்களின் கூட்ட வரிசையையும், பிற எல்லாவற்றையும துரிய நிலையையும (தன் மயமாய் நிற்கும் சுத்த உயர்நிலையையும) கடந்து, தத்துவங்கள் யாவும அழிந்து போகும முடிவு நிலைக்கு அப்புறத்தே நிற்கும்படி திருக்கண் சாத்தியருளுவீராக.

வேள்விக்குரிய வழி பொருந்தும்படி ஏற்பாடு செய்து தக்கன் செய்த அக்கினி குண்டங்கள் இருந்த யாகசாலையுள் நுழைந்து சக்கரம் ஏந்தும் கடவுள் திருமாலும், தாமரையில் வாழும் படைத்தல் தொழில் புரி பிரமனும் அச்சம் உறும்படி தாக்கியும்

சூரியனுடைய பற்களை உடைத்தும, இந்திரனாகிய குயிலின் திண்ணிய சிறகை அரிந்தும், எண் திசைப்பாலர்கள் அணிவகுத்த சேனைகளும நிலை குலைந்து அழிந்து போகும்படிக் கொன்றும் - உமா தேவியார்,

பதிவ்ரதம பற்றப் பெற்ற மகப்பெண்
பரிவு ஒழிந்து, அக்கிக்(கு) உடபடு தக்கன்
பரிபவம் பட்டுக் கெட(டு) ஒழியந், தன் செவியோம். அப்

பணவி பங்கப்பட்டு அப்படி வெடகும்
படி முனிந்து அற்றை கொற்றம் விளக்கும்
பரமா வந்திக்கக் கச்சியில் நிற்கும் பெருமானே.

---

(423) சாரங்கா (5½) 423 ப 1+½+½+½

அறிவிலாப் பிதற், உன்றன் அடி தொழாக் கெடட் வஞ்சர்
அசடா, பொய்க கத்தா, நன்றி அறியாத
அவலர், மேற், சொற்கள் கொண்டு கவிகள் ஆக்கிப் புகழ்ந்து
அவரை வாழ்த்தித் திரிந்து பொருள் தேடிச

சிறிது கூட்டிக் கொணர்ந்து, தெரு உலாத்தித் திரிந்து
தெரிவைமார்க்குச் சொரிந்து அவமே யான்

திரியு மார்க்கதது நிந்தை அதனை மாற்றிய, பரிந்து,
தெளிய, மோக்ஷத்தை என்று அருள்வாயே

கிறைவா மாற்றற்ற செம்பொன் வடிவம வேற்றுய பிரிந்து
இடப மேற் கசசி வந்த உமையாள தன்

பதிவிரதத்தனமையைக் கைப்பிடிக்கப் பெற்ற, (மக) இன்பப் பெண் ஆகிய அம்பிகையின், (பரிவு) - (தன்னையும், தன் கணவன் சிவனையும் தக்கன் புறக்கணித்தான் என்னும்) வருத்தம் தீரவும், அக்கினியில் விழப் பெற்ற தக்கன், அவமானம் பட்டு கெட்டு அழியவும், தனது (செவி செவவி) அழகு போய் அந்த

பாரயைஇயாகிய கலைமகள், பங்கம் அடைந்து (மூக்கு போய்) அவவாறு வெட்கப்படுமாறு கோபித்து. அனறைய நாளில, வெறறி பெற்றப் பரமர் வணங்கக கச்சியில் வீற்றிருக்கும் பெருமானே.

423

(423) மெய்யறிவில்லாத பித்துப் பிடித்தவர், உனது திருவடியைத் தொழாத கெடட வஞசகாகள், மூடர்களை, பேய் போல் அலைபவாகளை, நனறி அறிதல் இலலாத

பயனிலிகள் - ஆகைய இத்தகையோா மீது, சொறகள் கொணடு பாடல்கள் அமைத்து அவர்களைப புகழ்ந்தும், அவர்களை வாழ்த்தியும் (அதன பொருட்டுத்) திரிந்தும், பொருளைத் தேடி

சிறிதளவு சேகரிததுக் கொணடு வந்து, (மாது மகளிா வாழும்) தெருக களில உலவித் திரிநது, அப பெண்களுககு அப்பொருளை நிரம்பக் கொடுதது (இஙஙனம) வீண் காலம் கழித்து நாண

திரிகினற போக்கால் எனககு வருகினற நிந்தை மொழி அழியும்படி அருளி, என் மீது அனபு கூர்ந்து, நான் தெளிவு பெற, மோட்ச இனபத்தை எனக்கு என்று அருள் புரிவாய்!

சிவபெருமானது மாறறறியாத செம பொன வடிவம் வேறுபாடி அவரிடமிருநது பிரிநது, இடப வாகனத்தின் மீது காஞ்சிக்கு வந்த உமையாள தனது

*இருள் நீக்கத் தவம் செய்(து) அருள் நோக்கிக் குழைந்த
இறைவர் கேட்கத் தரும சொல் உடையோனே

குறவர் கூட்டத்தில் வந்து கிழவனாய்ப் புக்கு நின்று
குருவி ஓட்டித் திரிந்த தவமானைக்

குணம் அது ஆக்கிச் சிறந்த வடிவு காட்டிப் புணர்ந்த
குமர கோட்டத்து அமர்ந்த பெருமானே.

---

* உமாதேவியார் தன்னால் இறைவன் கண்மலரை மூடிய காரணமாக இனியைத் தரும் பொருள் சிவமே என்று காட்டியருள, அத்தவத்தின் குழைந்தருளிய இறைவர் கேட்க - - -

---

4) பாகேஸ்ரீ 4½ (✓) 3+½ 424

அற்றைக்கு இரைதேடி அத்தத்திலும் ஆசை
பற்றித், தவியாத பற்றைப் பெறுவேனோ
வெற்றிக் கதிர் வேலா வெற்பைத் தொளை சீலா
கற்று உற்று உணர் போதா - கச்சிப் பெருமானே ·

இருள் (அஞ்ஞானம்) நீங்கத் தவம் செய்து விளங்கு, அந்த (அம்மையின்) தவத்தைப் பார்த்து மனம் குழைந்த (உருகின) இறைவர் கேட்டு மகிழ்ந்தக்கதான (உபதேசச்) சொல்லை உடையவனே!

குறவர்களின் கூட்டத்தில் வந்து, கிழ வடிவுடன் போய் நின்று, தினைப்புனத்திலிருந்த குருவிகளை ஓட்டித் திரிந்த தவத்திற் சிறந்த வள்ளி பிராட்டியை

தெய்விக அருட்குணங்களை யுடையவராகச் செய்து, சிறந்த அருட் கோலத்தைக் காட்டி அவளோடு கலந்த, குமர கோட்டம் எனும் திருக் கோயிலில் வீற்றிருக்கும் பெருமானே

உண்டாகிய இருளை தொலையும் பொருட்டு மாதவம் செய்து உலகிற்கு திடத்தைப் பார்த்தருளி கம்பா நதியையே வி காமாக்ஷிதேவி தழுவக்

(424) 424

அன்றன்று வேண்டிய உணவைத் தேடி. பொருளிலும் ஆசை கொண்டு, தவிக்காத பற்றுக்கோடு ஒன்றைப் பெறுவேனோ

வெற்றியே விளங்கும் ஜோதி வேலனே! கிரவுஞ்சமலையைத் தொளைத்த பரிசுத்தனே!

ஞான நூல்களைக் கற்றுத் தியானித்து உணரப்படும் ஞான சொரூபனே! காஞ்சியிற் பெருமானே!

எனக்குச் சற்(று) உனக்குச் சற்(று)
எனக் கத்(து), அத்தவர்க்(கு), இச்சைப்
பொருள், பொற் தட்(டு) இடு இக்கைக் குக் குடிலமாயம்

எனக் கடைக்கு இடைப்பட்டு இட்டு
அனற் சுட்டிட்டு அடக்கைக்குப்
பிறக்கைக்குத் தலத்திற் புக்(கு) இடியாமுன்

<u>தினைக்குட் சித்திரக் கொச்சைக்</u>
<u>குறத் தத்தைத் தனத்தைப் பொற்</u>
<u>பெறச் செச்சைப் புயத்(து) ஒப்பித்(து)</u> <u>அணிவோனே</u>

<u>செருக்கிச் சற்(று) உருக்கிச் சொற்</u>
<u>பிரட்டத் துட்டரைத் தப்பித்</u>
<u>திரள் தப்பிக் கழற் செப்பத்</u> <u>திறல் தாராய்</u>

பணைக்கைக் கொக்கனைத் தடுப்
படக் குத்திப் பட, சர்ப்பப்
பணத் துட்கக் கடற் றுட்கப் பொரும் வேலா

பரப்பு அற்றுச் சுருக்கு அற்றுப்
பதைப்பு அற்றுத் திகைப்பு அற்றுப்
பலிப்பப் பத்தருக்(கு) ஒப்பித்து அருள் வாழ்வே

(425) எனக்குக் கொஞ்சம், உனக்குக் கொஞ்சம் என்று கூச்சலிடுகின்ற (அத்தவர்க்கு) பொருட் பெண்டிருக்கு (விலை மாதருக்கு) விருப்பமுள்ள பொருளை - பொன் தட்டில் வைத்துத் தருகின்ற (இக்கை) ஆபத்தைக் கொண்ட, (கு) சிறுமை வாய்ந்த இந்த (குடில்) தேகமானது மாயமாய் மறைந்தது,

என்று விறகுக்கட்டைகளின் இடையில் கிடத்தப்பட்டு, நெருப்பால் சுடப்பட்டு, அடங்குவதற்கும (இறந்து மறைந்து போவதற்கும்) பிறப்பதற்கும். இந்தப் பூமியில் தோன்றி மடிந்து அழிந்து போவதற்கு முன்னரே

தினைப்புனத்தில் அழகிய குழந்தை போலக் கொச்சை மொழிகளைப் பேசும் குறமகளாம கிளி போன்ற வள்ளி பிராட்டியின் கொங்கையை, அழகு பெற, வெட்சிமாலை அணிந்த திருப் புயத்தில் ஏற்று அணிபவனே!

அகந்தை கொண்டும், சிறிது கோபித்தும் பேசுகின்றவர்களும் (பிரட்ட) நன்னெறியினின்றும் தவறியவர்களும் ஆகிய துஷ்டர்களினின்றும் விலகி, (திரள் தப்பி) அக்கூட்டத்தினின்றும் விலகி, திருவடியைப் புகழும் ஆற்றலைத் தந்து அருளுவீராக!

பனைமரம் போன்ற நீண்ட துதிக்கையை உடையவனும், கொக்கு போன்ற குணமுடையவனும் ஆகிய தாரகனை தடைபடுமாறு குத்தி, (பட) அவன் அழிவுறவும், ஆதிசேடனுடைய படங்கள் அஞ்சவும, சமுத்திரம் அஞ்சவும போர் செய்த வேலனே!

பேராசை ஒழிய, லோப குணம் ஒழிய, நடுக்கம் ஒழிய, மயக்கம் ஒழிய, இத்தகைய நலன்களை உண்டாக்க அடியார்களுக்கு சோபித்து (அடையும்படி தந்து உதவி) அருள் புரியும் செல்வமே!

கனிக்குத் திக்(கு) அனைத்துசு சுற்
-றிடப பச்சைக கனப் படசிக(கு)
கிடைப் புக்குக் களிப்புக்குத் திரிவோனே
கவிக்(கு) உப்பு கிவ் சலிப்பற்றுக
கதிக(கு) உத்திட்(டு) எழிற் சுத்திக
கடற் கச்சிப்பதிச் சொக்கப பெருமானே.

---

(426) பெஹாக் (15½) 426 (—) (½+2+4+8)

கருமம் ஆன பிறப்பு அற ஒரு கதி
காணாது எய்தது தடுமாறும்
கலக காரண துற்குண சமயிகள்
நானா வர்க்கக கலை நூலின்
வரும் அநேக விகற்ப விபரித, ம
ஹாபாவத்துக்கு அசிது ஆய
மவுன பூரித சத்திய வடிவினை
மாயாமற்கு புகலவாயே
தரும வீம அருச்சுன நகுல ச
காதேவர்க்குப் புகல் ஆகி
சமர பூமியில் விக்ரம வளை கொடு
நாளோர் பத்(து) எட்டினில் ஆளும்
குரு மகிதலம் உட்பட, உளம் அது
கோடாமற்: கூத ரியா மாள

கனி பெறும பொருட்டு திக்குகள் முழுமையும் வலம் வர பச்சை நிறமுள்ள பெருமை வாய்ந்த மயிலின் மேல் ஏறி அமர்ந்து மகிழ்ச்சியுடன திரிவோனே!

கலியுகத்திலும் கவித்தல இல்லாமல் (மன உவப்புடன்) [பயுகில கதிக்கு] நிகரில்லாத கதியைத் தர – வீட்டின்பத்தைத் தருவதற்கு (முத்திக்கு) உடபட்டுள்ள – இசைந்து எழுந்தருளியுள்ள பெருமானே:

அழகிய சத்தியாம் – காமாட்சி தேவி வாழும். கடல் போல ஒலிக்கும் கச்சிமா நகரில் அழகிய பெருமானே

426

426

வினைக்கு ஈடான பிறவி தொலைவதற்கு ஒரு வழியும் தெரியாமல இளைத்துத் தடுமாறுபவரும

கலக்கம் தரும் கூச்சலுக்கே இடம் தருகின்ற பொல்லாத குணத்தை உடைய வருமான சமயவாதிகளின் பல விதமான சாஸ்திர நூல்களிற் சொல்லப்பட்ட அநேக மாறுபாடுகள் கொண்டதும், பொருந்தாதது மான மன உணர்ச்சிக்கு எட்டாததான

மௌன நிலை நிறைவு கொண்டதான உண்மை வடிவத்தை நான இறவாத தன்மை அடையுமாறு உபதேசித்தருளுவாயாக

தருமன், வீமன். அருச்சுனன், நகுலன், சகாதேவன ஆகிய ஐவர்க்கும் காப்பு அளிப்பவன் ஆகி.

போர்க்களத்தில பராக்கிரமம வாய்ந்த சங்கு கொண்டு நாள ஒரு பதினெட்டில் (போர) நிகழும்

இடம குருக்ஷேத்திரமாக, தமது திருவுள்ளம (கோபம்) நெறிமுறை யில நிறைவும், அரசர்கள் அழியவும

குலவு தேர் கடவு அசுகுதன் மருக கு
மாரா கசசிப் பெருமானே

(427) தோடி (8) ஸ்ருதி 427

கறை கிவங்(கு) உக்ர சத்தி தரிக்கும
சரவணன, சித்தத்துக்கு (உ)ள் ரனிக்கும்
கரவடன், கொற்றக் குககுட அத்தன தனி வீரக்
கழலிடும் பத்மக், கட் செவி வெறுப்பன,
பழநிமன், கச்சிக் கொற்றவன், மறும்
குடக வஞ்சிக்குக் கார்த்தன் எனச் செந் தமிழ் பாடி

குறைவில் அன்புறுக் குற்ற(ம்) மறுக்கும்
பொறைகள் நநத (அ)ற்பப் புத்தியை விட(டு) என்
குணம் அடக்கக் கெடுக் குண(ம்) மற்று ரன்று இவ்(து)ஆன

குணம் அடைந்து, எபற்றுக்களும் அறும்,
குறியொடும் சுத்தப் பத்தர் இருக்கும்
குருபதம் சித்திக்கைக்(கு) அருள் சற்றும கிடையாதோ

பிறை, கரந்தைக் கொத்துப் பணி மத்தத்
தலை எலும்பு அயுக் கொக்கு இறகு அக்கம்
பிரமன் அன்று எட்டறகு அற்ற திருக் கொன்றையும் வேணி

(அரசனுடைய) சிறந்த தேரைச் செலுத்திய திருமாலுக்கு மருகனே! குமரனே! கச்சிப் பெருமானே.

427

(427) உதிரக்கறை விளங்கும் உக்கிரம் பொருந்திய வேற்படையை ஏந்தும் சரவண மூர்த்தி, உள்ளத்துக்குள் ஒளிந்திருக்கும் கள்வன், சிவந்த சேவல் கொடியை ஏந்திய கரத்தினன், ஒப்பற்ற வீரக்

கழல் அணிந்துள்ள தாமரையன்ன திருவடியையுடையவன், பாம்பு (திருச்செங்கோடு) மலையினன், பழநி அரசன், கச்சி வீரன், மின்னும் கங்கணம் தரித்த வஞ்சிக்கொடி போன்ற வள்ளிக்குத் தலைவன் என்றெல்லாம் செந்தமிழ்ப் பாக்களைப் பாடி

குறைவில்லாத அன்பு பூண்டு, குற்றங்களை விலக்க வல்ல பெருமைக் குணங்கள் (நந்த - வளர்ச்சியடைய) சிறந்து மேம்பட, அற்பமான புத்தியை ஒழித்து, என்னிடம் உள்ள தீய குணங்கள் எல்லாம் கெட்டு, குணம் வேறு ஒன்று இல்லாததான

நற்குணத்தை அடைந்து (ஒரே நிலையான வேறு குணங்கள் கலக்காத சாத்விக குணம் ஒன்றையே அடைந்து) எல்லாவிதமான பற்றுகளையும் ஒழித்தும், இறைவனுடைய அருட்குறியையே கருதும் பரிசுத்தமான பக்தர்கள் இருக்கும், ஞானசரிய நிலை எனக்குக் கைகூடுவதற்கு உனது திருவருள் சற்றேனும் கிடைக்காதோ?

நிலவு, திருநீற்றுப் பச்சைக் கொத்துகள், பாம்பு, ஊமத்தம் பூ, பிரம்ம கபால எலும்பு, கங்கை நீர், கொக்கிறகு, ருத்ராக்ஷ மாலை, பிரமன் அன்று எட்டுதற்கு அரிதாக இருந்த அழகிய கொன்றை இவையெல்லாம் அணிந்த சடை

பிறவு, தினற்று) நக்கத் தொக்கு மணக்கும
சரணி, அம் பத்மக கைக கொடி, முக்கண
பெறு கரும்பு அத நக்கதது அருள நற் பங் கய வாவி

திரை கொளும சித்ரக் குத்து மூலக்கொம்பு
அறியும் அழ்தத்தை கைக்கு அகம் மொய்க்கும
த்ரிபுரை செம்படடுக் கடடு துகப்பின திருவான

தெரிவை, அம தார்க்கிச், சத்தி, எவாக்கும
தெரி அருஞ் சுத்தப் பச்சை நிறப பெண
திறவ, தொண்டர்கருக் சித்தி அளிக்கும் பெருமானே (கு)

(428) ஆரபி (8) 428 (உ) ஆதி

கனி தரும கொக்குக கட் செவி வெற்பும்,
பழநியும் தெறுகச் சற்குரு வெறயுங்
கதிரையும். சொறு வெட்பட்ட திருச் செரு திவும வேலும்

(சடையில் உள்ள) மற்றவையும், நிலை பெற்று நன்று சேர்ந்து கமழ மணம் வீசும் திருவடியை உடையாள் (சிவபெருமான், தனது பாதத்தில் வீழ்ந்து வணங்குவதால் அவர் சிரசில் இருந்த எல்லாப் பொருள்களின் மணமும் தனது திருவடியிற் பொருந்தி வீசப் பெற்றவள்) அழகிய தாமரை போன்ற திருக்கரத்தை உடைய கொடி போல்வாள், மூன்று கணுகளை கொண்ட கரும்பு போன்றவள் (அ தக்கது அருள) அந்த தக்கதான பொருளை (எது தக்கதோ அதை அறிந்து அருளுகின்ற) அருள்பவள், நல்ல திருக்குளத்துத் தாமரையையும்

கப்பம் கட்டச் செய்யும் (வென்று அடக்கும) அழகிய திரண்டு குவிந்த தனங்களையுடைய கொம்பு போன்றவள், எல்லாவற்றையும அறிந்த (ஞானமுள்ள) அழகிய கிளி, கையினிடத்தே பயின்று இருக்கும் திரியுரை (சந்திர கண்டம், சூரிய கண்டம், அக்கினி கண்டம் என்னும் முப்பிரிவையுடைய சக்கரத்துக்குத் தலைவி) சிவந்த பட்டாடை யுடுத்துள்ள இடையையுடைய, லக்ஷ்மீகரம் பொருந்திய

நங்கை, அழகிய துர்க்கா தேவி சத்தி, எவர்க்கும தெரிவதற்கு அரிதான, தூய பச்சை நிறங் கொண்ட பெண் ஆகிய பார்வதி தேவியின் திருக்குமாரனே! அடியார்க்கு வீடு பேற்றை அளிக்கும் பெருமானே.

428

(428) பழங்களைத் தருகின்ற மாமரங்கள் நிறைந்த சர்ப்ப கிரியாம திருச்செங்கோட்டையும், பழநியையும் - தெற்கில உள்ள சுவாமிமலையையும் கதிர்காமத்தையும், புகழுக்கு இருப்பிடமான திருச்செந்தூரையும் வேலாயுதத்தையும

கனவிலும் செய்பத் தப்பும் எனைச், (

சங்கட உடம்புக்குத தக்க அனைத்தும்

களவு கொண்(டு) கிட்டுக், கற்பனையிற் கண் சுழல்வேனை

புனிதன், அம்மைக்குக் கைத்தல ரத்னம்,

பழைய நங்கைக்(கு) உற்றப் புது முத்தம்.

புவியில் அன்னைக்(கு) அறுசு எய்ப்பவா வைப்பு என்று உருகா எய்

பொருதும் வந்திகைக்கு அற்ற எனைப் பின்

பிழை உடன் படுப புத்தருள் வைக்கும்

பொறையை என் செப்பிச் செபுவது நப்பு நன்று உளதோதான(மு)

அனனியம் பெறு அறு அற்று அரு பற்றும்

தெளி தரும் தெதர்கத் தெளிசிற் கொருது

அமலே, தென் கச்சிப் பிச்சி மலாக் கொந் தளபாரை

அறவி நுண் பச்சைப் பொற் கொடி கற்கண்டு

அமுதினும் தித்திகப்படும் சொற் கொம்பு

அகில அண்டத்து உற்பத்தி செய் முத்தின் பொல மேரு

கனவிலும் சொல்லி அறியாத என்னை, துணைந் தரும் இந்த உடம்புக்கு வேண்டிய சகல பொருள்களையும் திருட்டு வழியிலாவது அடைந்து கபட யோசனைகளிலேயே நோக்கம் கொண்டு சுழலும் என்னை

புனிதமூர்த்தி, பார்வதி தேவிக்கு கையில் விளங்கும் இரத்தினம், பழைய கங்கா தேவிக்குக் கிடைத்த புது முத்தம், பூமியில அனைத்தை தொன்று ஒன்றும் சேமித்து வைக்காது (இறைவன் திருவுளச் சம்மதம் என்று யாவற்றையும் விட்டு) இளைத்த பெரியோர்களுக்கு சேம நிதியாக விளங்குபவன் என்றெல்லாம் கூறி உருகி

எப்போதும் வணங்குதலே இல்லாத என்னை, பின (இந்தக் குறைகள் உடையவன் என்று உணர்ந்த)பினனும், என்னுடைய குறைகளைப் பொறுத்துச சம்மதித்து, என்னையும் உனது புத்தர் கூட்டத்துள ஒருவராக வைத்துள்ள உனது பொறுமையை-கருணையை, என்ன என்று சொல்லிப் புகழ்வது? (அந்த உனது கருணைக்கு) நிகர் (ஒப்பு) ஒன்று உள்ளதோ தான் - நிகரே இல்லை என்றபடி

அனனியமில்லாத ஒன்றுந் தன்மையை (அத்துவைத நிலையை) பெற்று எவ்வித பற்றும் நன்றாக அற்றுப் போய், தெளிவு அடைந்த சித்தத்தவர்கள், தெளிந்து உணர்ந்த அறிவுருவான - பூங்கொத்துககளை அணிந்த மலமற்றவள்-நிர்மலி- அழகிய கச்சிப் பதியில, பிச்சி மலரை அணிந்துள்ள கூந்தல் உடைய (பாசை'பரை)பராசக்தி

அறச்செல்வி - புண்ணியவதி- அறம் வளர்த்த நாயகி, துணணிய பச்சை நிறமுள்ள அழகிய கொடி போன்றவள், கற்கண்டு அமிர்தம் என்ற இரண்டினும மிகுதியாக இனிக்கின்ற சொறகளையுடைய பூங்கொம்பு போன்றவள, எல்லா அண்டங்களையும தோற்று விக்கும் அழகிய முதராவாகிய மேருமலை போன்றவள

தனி வடம் பொற்புப் பெற்ற முலைக்குன்று
இணைசுமந்(து) எய்க்கப்பட்ட நுசுப்பின
தருணி, சங்கு (உ)ற்றூந் ததது திரைக் கம் பையினூடே

தவம் முயன்று அப் பொற்புப் படி கைக்கொண்டு
அறம் இரண்டு எட்டு, எட்டு எட்டும் வளர்க்கும்
தலைவி பங்கர்க்கு சதயம் உரைக்கும் பெருமானே

---

(429) கலயாணவஹதம் (12) 429 (+) ஆதி திஸ்ர நடை

கொதது ஆர் பற் கால் அறறு ஒகப், பாழ
குப்பாயத்திற செயல் மாறிக
கொக(கு) ஆகிக், கூனிக், கோல தொடடே,
கொட்டாவிக் குப்புற வாசித்

தித்தா திற்றா செத்தார் கெட்டேன்
அஆ உஉ எனவே கேள்
செறறே சுடடே விட(டு) ஏறிப் போம
அப் பேதுந்துககம் அறாதோ
தித்தா வித்தாரத் தோகைககே
நிற்பாய கச்சிக் குமரேசா
நிடரேச தூர் கெட(டு) ஓடப போா
நெட்(டு) ஓதத்திற பொருதோனே

ஒப்பற்ற மணி வடத்தின் அழகு பெற்ற கொங்கை மலையைச் சுமந்து அதனால் இளைத்து நிற்கும் இடையை உடைய இளமைப் பருவத்தினள், சங்குகள் பொருந்தித் ததும்பிப் பரவிச் செல்லும் அலைகளை உடைய கம்பை ஆற்றுக்கு அருகே

தவம் செய்து அந்த (பொற்ற) சிறந்த படியை கையிற் கொண்டு அறம் இரண்டு எட்டு (2×8-16). எட்டு (8) எட்டும் (8) முப்பத்திரண்டையும் வளர்த்த தலைவி (காமாட்சி தேவியின் பங்காளராம் : சிவபெருமானுக்கு மெய்ப்பொருளை உபதேசித்த பெருமானே.

429.

(429) வரிசையாக நிறைந்திருந்த பற்கள், (காலை) அடி - வேரோடு விழுந்து போகப் பாழ்படும் சடமையான (இந்த உடலின்) செல்வங்கள் தடுமாறி

மயிரெல்லாம் கொக்கின் நிறமாய் வெளுத்து, கூன் அடைந்து, ஊன்றுகோல் பிடித்து, கொட்டாவி விட்டுத் தலை குனிதலையடைந்து. (இங்ஙனம்) வாசி- நிலை வேறுபாடுகளை

அநுபவித்து நின்றார், (பின்னர்) இறந்தார், (ஐயோ) கெட்டேன் எனக் கூறிக் கதறி "அஆ உ உ" என்ற ஒலியுடன் உறவினர் அழ

சுடுகாட்டுக்குச் சென்று, பிணத்தைச் சுட்டு விட்டுச் சுடலையை விட்டு வெளியேறிப் போகின்ற அந்தப் பேதைமைத் துக்கம் நீங்காதே.

என்றும் உள்ளவனே! விசித்திரம் நிறைந்த மயிலின் மீது விளங்கி நிற்பவனே! கச்சிக் குமரேசனே!

கொடுமை வாய்ந்த சூரன் கேடு அடைந்து (கடலிடையே) ஓடப் போரினைப் பெரிய கடலிற் செய்தவனே!

முத்(து) ஆரத் தோளிற் கோடற்பூ
முட்டா(து) இட்டத்(து) அணிவோனே
முற்று நித்தா அத்தா சுத்தா
முத்தா முத்திப் பெருமானே.

(430) தாபாரா (3½) 430 (=) 1½+2

சீசி முப்புரக் காடு நீறு எழச்
சாடி, நித்திரைக் கோசம் வேர் அற
சீவன் முத்தியிற கூடவே களித்(து) அநுபூதி

சேர, அற்புதக் கோலம் ஆம் எனச்
சூரியப் புவிக்கு ஏறி ஆடுகச்
சீலம் வைத்து அருள் தேறியே இருக்(க) அறியாமல்

பாசம் விட்டு விட்டு ஓடிப் போனதும்
போனதும், இப்படிக்கு ஆகிவேன், இனிப்
பாழ் வழிக்(கு) அடைக்காமலே பிடித்(து) அடியேனைப்

பார் அடைக்கலக் கோலம் ஆம் எனத்
தாபரித்து நித்த ஆரம் ஏது எனப்
பாத பத்ம நற போதையே தரித்து அருள்வாயே

முத்து மாலை அணிந்த தோளில், வெண் காந்தள் மலரை குறைவின்றி விருப்பத்துடன் அணிபவனே!
முதுமை வராத நித்தனே (என்றும் உள்ளவனே!), தலைவனே! பரிசுத்தனே! வீடு பேறுள்ளவனே! முத்தியைத் தரும் பெருமானே!

431

(430) சீசி என இகழ்ந்து தள்ளத்தக்க, முப்புரம் போல துன்பம் செய்யும் மும்மலங்கள் என்கின்ற காடு வெந்து சாம்பலாகும்படி அவைகளை அழித்து (துகைத்து ஒழித்தெரிந்து) தாக்கமும், ஆன்மாவை மூடிக் கொண்டிருக்கிற பஞ்ச கோசங்களும் அடியோடு ஒழிய, ஆன்மா இம்மையிலேயே முத்தியடையும் நிலையை நான கூடுதற்கு மகிழ்ச்சி யுறுது அனுபவ ஞான நிலையைச்

சேருமாறு அற்புதத் தோற்றம் இது என்று கூறுமபடி சூரிய மண்டலம் போய் அங்கு நடனம் புரிய (சூரிய மண்டலம் போன்ற சோதியைக் கண்டு களிப்பதற்குரிய) ஒழுக்க நிலையை அடைந்து, திருவருளை உணர்ந்து சிவானுபவத்தில நிலை பெற்றிருக்க அறியாமல்

பாசங்களை அடியோடு ஒழியாமல, விட்டு விட்டு ஒடிப் போனதுப் போதும்; இவ்வாறு இடையிடையே பாசம் விலகும் நிலை வேண்டாம்; இனிப் பாழ்படும் நெறியில் எனைப் புகுத்தாமல், எனைப் பிடித்து,

உலகில உனக்கு அடைக்கலமாக வைககபபட்ட ஓர் உருவமாம் எனக்கொண்டு, ஆதரித்து, நித்தியமான ஓர் ஆபரணம் இது என்று பாத தாமரையாகிய நலல மலரை என மீது தரிக்கச் செய்து (என் முடியிற் சூட்டி) அருளவாயே.

தேசு கில துடட நிட்டுர கோதுடைச்
ஆறை வெட்டி எட்(டு) ஆசை ஏழ் புவித்
தேவர் முத்தர்கட்கு ஏதமே தவிர்த்(து) அருள்வோனே

சீர் படைத்(த) அழற் சூல(ம்) மான் மழுப்
பாணி வித்துருப் பாதன் ஓர் புரச
சீர் திகழ்ப் புகழ்ப பாவை ஈனப் பொற் குருநாதா

காசி, முத்தமிழ்க கூடல, ஏழ்மலைக்
கோவல், அத்தியிற்கானம, நான்மறைக்
காடு, பொற்கிரிக் காழி ஆரூர் பொற புலி, வேளூர்

காளஅத்தி அப்பால் சிராமலைத
தேச முற்று மெய்பூசை மேவி, நற்
காம கச்சியிற் சால மேவு பொற் பெருமானே.

---

431) சண்முகப்ரியா 431 (8) (-) ஆதி

செறிதரும் செய்த்(து) உறபல வெறபும
பிறிதும் அங்(கு) அத்தைக்கு உறற இருப்பும்
சிகரி துண்டிக்கக கறற தனிச செஞ் சுடர் வேலும்

திரள்புயம் கொத்துப்பட்ட அனைத்தும்
தெளிய நெஞ்ச(ம்) துப்(பு) உற்று மயக்கம்
திகழ ப்ரபஞ்சத்தைப புறபுதம ஒக்கும படி, நாடும்

ஞானம் இலலாத துஷ்டனும், கொடுமை வாய்ந்தவனும், குற்றம் உள்ளவனுமாகிய சூரனை வெட்டி, எட்டு திசைகளிலும், ஏழு உலகங்களிலும் உள்ள தேவர்களுக்கும், முத்தி நிலை கண்ட பெரியோர்களுக்கும் இருந்த துன்பத்தை நீக்கி அருளியவனே!

சிறப்பு பொருந்திய நெருப்பு, சூலம், மான், மழு இவைகளை (யாணி) திருக்கரத்தில் ஏந்தியவரும், பவள (நிறத்) திருவடியையுடையவரும் சிவனுக்கு நடு பாகத்தில உள்ள, சிறப்புடன் விளங்கும் புகழ் நிறைந்த தேவி பார்வதி பெற்றருளிய அழகிய குருநாதனே!

காசி, முத்தமிழ் விளங்கின மதுரை, திருவேங்கடம், திருக்கோவலூர், திரு ஆனைக்கா, (நான்மறைக் காடு) வேதாரணியம், கனகதிரி, சீகாழி, திருவாரூர், அழகிய சிதம்பரம், வைத்தீச்சுரன் கோயில் சீகாளத்தி, அதன் பின் திருசிராய்பள்ளி ஆகிய நாடு முழுமையும் மூன்று காலங்களிலும் வழிபாடு நடததப பெற்று, அழகிய விருப்பத் தகக கச்சியில் மிகவும் விரும்பி வீற்றிருக்கும் அழகிய பெருமானே.

431

(431) நிறைநது நெருங்கி மலரும் செம்மையான செங்கழுநீர் மலையாகிய திருத்தணியும், பின்னும் அங்கு அத்தணிகை போன்ற பிற தலங்களும், மலை (கிரவுஞ்சகிரி) துண்டுபடச் செய்ய வலவதான நீப்பற்ற செவ்விய ஒளியுடன் கூடிய வேலாயுதமும்

திரண்ட புயங்கள் கொத்தாகவுள்ள யாவும் (பன்னிரண்டும்) தெளிவு பெற நெஞசத்தில் அறிவு அடைந்து, மயககமே நிறைந்துள்ள இவ்வுலகு நீர்க்குமிழியின நிலையை ஒத்தது என்னும தன்மையை ஆய்ந்து உணரும

அறி(வு) அறிந்து அந்தறகு, அற்றது செயுங்
கடவுளன் பத்தர்க்கு அச்சம அறுத்து அன்(பு)
அருள்பவன் பொற்புக் கச்சியுள நிறகும பெருமான்என்(று)

அவிழும் அன்புறுக் கற்று, மனத்தின்
செழல் நழிந்(து), நடப் பட்டதனைச் சென்று
அடைதரும் பதவத்தைத் தமியெறகு என்று அருள்வாயே (மு

குறியவன், செபபப்படட எவர்க்கும்
பெரியவன், கற்பிககப்படு சுக்ரன்
குலைகுலைந்(து) உட்கச், சுதய(ம்) மிழற்றும் சிறு பாலின

குதலையின் சொற்குத் தர்க்கும் உரைக்குங்
கனகன அங்கத்திற் குத்தி நிணச செங்
குடர் பிடுங்கத் திகழுற்ற முகச் சிங்க - முராரி
பொறிவிடும் துத்திக் கட்செவியிற, கண்
துயில கொளுமை சக்ரக் கைகக், கிரி சுத்தம்
புயல் எனும் பொற்புப் பெறற நிறததன் ஜகதாதை
புனித சங்கததுக் கைத்தல நிர்த்தன்
பழைய சந்தத்தைப் பெற்ற மடப்பெண்
புகலு கொணடறருச் சித்தி அளிக்கும் பெருமானே (கு)

அறிவை அடைந்து, தந்தையாம் பெருமானுக்கு, பற்றற்று தத்துவங் கடந்து நிற்கும் பொருளை உபதேசித்த இறைவன் என்றும், அடியார்களுடைய அச்சத்தை அகற்றி அனைவ அருளுபவன் என்றும் அழகிய காஞ்சியில நின்றருளும் பெருமான் என்றும் (கூறி)

நெகிழ்ந்து உருகும் அன்பு பூண்டு, திருவருள் நெறியைக் கற்று (பயின்று), மனத்தின தொழில ஒழிந்து (மன ஒருக்கம் உற்று - மனோலயம் பெற்று) அந்த நிலையில எட்டப்படுவதான - கிடைப்பதான - பொருளைப் போய் அடையும் பக்குவத்தை (ஆன்ம பரிபாகத்தை) அடியேனுக்கு எப்போது அருளுவாய்?

குறளுருவம் (வாமனாவதாரம்) எடுத்தவன், சொல்லப்படும் எவரினும் பெரியவன், கல்வி கற்றுக் கொடுக்க வந்த சுக்கிராச்சாரியார் உள்ளம் நடுநடுங்கி அஞ்ச, உண்மையை சாதித்து மேலாகச் சொன்ன சிறு குழந்தை (பிரகலாதனுடைய)

மழலைச் சொல்லுக்கு எதிர வாதம் பேசிய இரணியனுடைய உடலைக் குதறி, மாமிசம் நிறைந்த செவ்விய குடலைப் பிடுங்கித் திசைகளை எட்டிய - மிகப்பரந்த - முகத்தைக் கொண்ட நரசிங்க திருமால்

ஒளி வீசும் படப் பொறிகளை உடைய, பாம்பின் மீது துயில் கொளும் சக்ராயுதத்தை ஏந்திய கையையுடைய. மலை போன்றவன், பரிசுத்தமான மேகம் எனத்தக்க அழகு வாய்ந்த நிறத்தவன், உலகுக்கு தந்தை

பரிசுத்தமான பாஞ்சஜன்யம் எனும் சங்கைக் கரத்தில் கொண்ட சுத்தன். பழைய வடிவைக் கொண்ட மெய்யன். புகழப்படும் மேக நிறத் திருமாலுக்கு, வீடு பேறளித்த பெருமானே

(8) ஜ ஆதி

2) சுத்த தன்யாஸி

தலைவலையததுத் தரம பெறும், பல
புலவர் மதிக்கச், சிகண்டி, குன்று எறி
தரும் அயில், செச்சைப் புயம, கயம்குற — வசுகியோரு

தமனிய முத்துச் சதங்கை, கிண்கிணி
தழுவிய செக்கசிவந்த பங்கய
சரணமும வைத்துப் பெரும் ப்ரபந்தம வினமபு — காளப்

புலவன் எனத், தத்துவம் தரம் தெரி
தலைவன் எனத், தக்க அறம் செயும் குண
புருஷன எனப், பொறபதந் தரும் சரணம — பெருதோ

பொறையன எனப் பெரய பரபஞ்சும் அஞ்சிய
துறவன் எனத் திக்(கு) கியமபுகின்றது
புதுமைம அலச், சிறபரம் பொருநதுனை — தருதிடாதோ

குலசயிலத்துப் பிறநத பெண்கொடி
உல(கு) அடையப் பெற்ற உந்தி அந்தணி
குறைவற முப்பததிரண(டு) அறம புரி — கின்ற பேதை

(432) முதல் எல்லையில (வகுப்பில்) வைக்கத் தக்கத் தகுதி (மேன்மை) பெற்றுள்ள பல புலவர்கள் போற்றித் துதிக்க, உனது மயிலையும், கிரவுஞ்ச மலையைப் பிளந்து எறிந்த வேலையும், வெட்சிமாலை அணிந்த புயங்களையும், (கயவகுதி) யானை வளர்த்த தேவசேனையையும், குறவர் வளர்த்த வள்ளியையும

பொற் சலங்கை முத்துச் சதங்கை, கிண்கிணி சூழ்ந்துள்ள, மிகச் சிவந்த தாமரை மலர போன்ற திருவடியையும் வைத்துப் பெரிய பாமாலைகளைப் பாட வல்ல காளமேகம போன்ற

புலவன் இவன் என்று சொல்லும்படியும், உண்மை ஞானம் பெற்ற தலைவன் இவன என்று கூறும்படியும், சரியான தருமங்களைச் செய்யும் நற்குணமுடைய சற்புருஷன் இவன என்று உலகோர் கூறும் படியும, மேலான பதவியைத் தருகின்றதான பிறப்பை இந்த ஆணமா பெறுதோ? (நான பெறேனோ)

பொறுமை உடையவன் இவன என்றும், பொய் உலகைக் கண்டு பயந்த துறவி இவன என்றும், திசைகளில உள்ளோர (உலகோர் சொல்வது ஒர அதிசயம் அன்று; அறிவுக்கு மேமபட்ட பெரு நிலையைச் சேர்ந்து பொருந்தும் பேற்றினை (நினது திருவருள்) தந்து அருளாதோ?

சிறந்த மலையாம் இமயத்தில் பிறந்த பெண்கொடி, உலகு எல்லாவற்றையும ஈன்ற திருவயிற்றை உடைய அழகிய நடபம் உடையாள் (ஒளிரும குணம உடையாள்) குறைவு இல்லாத வகையில முப்பத்திரண்டு அறங்களைச் செய்கின்ற தேவி

குணதரி சக்ரப் ப்ரசண்ட சங்கரி
கணபண ரத்நப் புயங்க கங்கணி
குவடு குனித்துப் புரஞ் சுடும் சின — வஞ்சி, நீலி

கலப விசித்ரச் சிகண்டி, சுந்தரி,
கடிய விடத்தைப் பொதிந்த கந்தரி,
கருணை விழிக, கற்பகந, திகமபரி — எங்கள் ஆயி

கருதிய பத்தர்க்கு இரங்கும் அம்பிகை
சுருதி துதிககப்படும த்ரியம்பகி
கவுரி திருக கோட்ட(ம) அமர்ந்த இந்திரா — தம்பிரானே

433

(433) கானடா (8) (-) ஆதி

நசசு அரவம் மெனறு, நசசு அரவம எனறு
நச்சு உமிழ கனாக — மதியாலும்

நத்தொடு முழங்கு கனதொடு முழங்கு
நதிரை வழங்கு — கடலாலும்

இச்சை உணாவு இனறி இசசையென வநத
இசசிறுமி நொநது — மெலியாதே

நற்குணங்களைத் தரித்தவள். (சகரம்) மந்திர யந்திரததில் வீரத்துடன விளங்கும் சங்கரி கூட்டமான படங்களை உடைய இரத்ன மணியைக் கொண்ட பாம்பைக கை வளையலாக அணிந்தவள், மேரு மலையை வளைத்துத் திரிபுரத்தை எரித்த கோபங் கொண்ட வஞ்சிக கொடி போனறவள், நீல நிறமுடையவள்

(விசித்ரக் கலப சிகண்டி) விசிதரமான தோகையைக் கொண்ட மயில்ரூபம கொண்டவள், அழகி. பொல்லாத நஞ்சினை அடக்கி வைத்துள்ள கழுத்தை உடைவள், வேண்டுவார்கு வேணடுவதை அளிக்கும கற்பகம் போன்றவள். திசைகளை ஆடையாக உடையவள் (நிர்வாண எங்கள் தாய்,

தியானிக்கின்ற பக்தாகட்கு கருணை புரியும் அம்பிகை, வேதங்கள துதி செய்யும முன்று கண்களை உடையவள், காமாடசியின திருக்கோயிலில எழுந்தருளியிருக்கும் தேவேநதிரர்கள் துதிககும் தம்பிரானே-

433

(433) (நசசுதல: விரும்புதல்) விரும்பிப் பிடிகக வந்த கேது எனற பாம்பு மென்று- விழுங்கி வெளியிடட காரணத்தால், (தானும்) நஞசை யுடைய பாமபு எனறே கூறுமபடி, நஞ்சினை என மீது கக்குகின்ற களங்கத்தையுடைய நிலவாலும்

சங்கினுடன பேரொலி செய்கின்றதும், (கனம) மேகததுடன முழங்குகின்றதும, (ந - சிறந்த நக்கிரன) சிறநத அலைகளை வீசுவதுமான கடலாலும

இச்சையினால் அறிவு மயஙகி, தேவரீர மீது காதல எனறு கூறி வந்த இநதச சிறு பெண நொநது மெலியாமல

எத்தனைய நெஞ்சில் எத்தனம் முயங்கி
இத்தனையில் அஞ்சல் — என வேணும்

பச்சை மயில் கொண்டு பச்சை மற மங்கை
பச்சை மலை எங்கும் — உறைவோனே

பத்தியுடன் நின்று பத்தி செயும் அன்பர்
பத்திரம் அணிந்த — கழலோனே

கச்சு இவர் குரும்பை கச்சவா விரும்பு
கச்சியில் அமர்ந்த — கதிர்வேலா

கற்பக வனம் கொள கறபு அக விசும்பர்
கைத்தளை களைந்த — பெருமானே.

---

(34) சாரங்கா — 3½ — 434 (ம) (5½+2)

படிறு ஒழுக்கமும் மட மனத(து) உள
படி பரித்(து) உடன் — நொடி பேசும

பகடிகட்கு உள மகிழ மெய்ப் பொருள்
பல கொடுத்து அற — உயிர் வாடா

மிடி யெனும் பெரு வடவை சுடவிட
விதனம் உற்றிட — மிகவாழும்

எவ்வளவோ நெருசிலே, முயற்சிகளை (முயங்கி) மேற்கொண்டு செய்பவளாகிய இவளை, இந்த அளவிலே (இப்பொழுதே) அஞ்சல் என்று கூறி அருள செய்ய வேண்டுகின்றேன்.

பச்சை மயிலை வாகனமாகக் கொண்டு, பச்சை நிறம் கொண்ட வேடப் பெண் (வள்ளி) யுடன் பசுமை வாய்ந்த எல்லா மலைகளிலும் உறைபவனே!

பத்தி நெறியிலே நிலைத்து நின்று பத்தி செய்கின்ற அன்பர் பூசிக்கும் இலைகளை, பூ இதழ்களை அணிந்து கொள்கின்ற திருவடியை உடையவனே!

ரவிக்கை (இரவா) ஏறி உள்ள (அணிந்துள்ள), தென்னங் குரும்பை போன்ற கொங்கைகளை (கச்சவா: கைத்தவா) வெறுத்த வாகனாகிய பெரியோர்கள் விரும்பும், கச்சியில் வீற்றிருக்கும் ஞானவேலனே.

கற்பக வனத்தை யுடைய, (கற்பு) நீதி நெறியில் நிற்கும் (அகம்) உள்ளத்தைக் கொண்ட விண்ணுலகத்தவராம் தேவர்களின் கை விலங்குகளை அறுத்தெறிந்த பெருமானே

434

(434) வஞ்சனை கூடிய நடவடிக்கையை, அறியாமையுடைய மனத்துள் உள்ளபடியே மேற்கொண்டு, அப்போதைக்கு அப்போது (நொடி) தந்தி, ரச் சொற்களை பேசுகின்ற

வெளிவேட தாரிகளாகிய பொதுமகளிருக்கு அவர்கள் உள்ளம் மகிழ்ச்சி கொள்ளும்படி, உடலையும் பொருள்கள் பலவும் கொடுத்து மிகவும் உயிர் வாட

வறுமை என்ற பெரிய வடவைக் கனல் என்னை எரிக்க, துன்பத்தை அடைந்து, மிகவும் அத் துன்பத்துடன் வாழும்

விரகு கெட்டு அரு நரகு விட்டு இரு

வினை அறப் பதம் — அருள்வாயே

கொடி இடைக் குற வடிவினைப் புணர்

குமர, கசசியில் — அமர்வோனே

குரவு, செச்சை, வெண் முளரி), புத்து அலர்

குவளை, குறறு அணி) — திருமார்பா

பொடி படபட நெடிய விற கொடு

புரம் எரித தவர் — குருநாதா

பொரு திரைக் கடல் நிருதரைப் படை

பொருது உழக்கிய — பெருமானே.

---

5 ஊிநதோளம் (8) ரூ ஆதி 435

புரை படும் செற்றக் குற்ற மனத்தன்

தவமிலன, சுதத சதய அசத்யன்,

புகல் இலன், சுறறுஅச செத்தையுள நிற்கும், துரிசாளன்

பொறை இலன, கொத்துத் தத்வ விகற்பஞ்

- சகலமும பற்றிப், பற்றற நிற்கும

பொருளுடனே பற்றுச சற்றும் இல் வெற்றன கொடியோன், நின

கறைஅறும் சித்ரச் சொற்புகழ் கற்கும

கலையிலன், கடைப் புத்தியன மட்டன்

கதியிலன, செச்சைப் பொற்புய வெற்புங் — கதிர்வேலும்

அழிவு நிலை அழிந்து, அரிய நரகில் விழுவது விலகி, நல்வினை-தீவினை யென்ற இருவினைகளும் ஒழிய திருவடியை அருள்வாயே.

கொடி போன்ற இடையை உடைய, குறககுலத்து அழகியை மருவிய குமரனே! கச்சியில் வீற்றிருப்பவனே!

குராமலர், வெட்சி மலர், வெண்டாமரை, புதிதாக மலர்ந்த குவளைப்பூ இவையெல்லாம் நிரம்ப அணிந்து கொள்ளும் அழகிய மார்பனே!

பொடியாகி அழியும்படி, பெரிய (மேரு மலையாம) வில்லை ஏந்தித் திரிபுரத்தை எரித்த சிவபெருமானுக்கு குருநாதனே

மாறுபட்டு எழுகின்ற அலைகளையுடைய கடலையும், அசுரர்களையும் அவர்களது சேனைகளையும், போர் செய்து கலக்கிய பெருமானே.

435

(435) குற்றத்துக்கு இடமான தணியாத கோபம் முதலான பல குற்றங்களைக் கொண்ட மனத்தை உடையவன், தவம் என்பதே இல்லாதவன், கலப்பில்லாத உண்மையான பொருளை நீக்கற்றவன், சுழற்சியுறும் அந்தக் குப்பை போல நிற்கின்ற துக்கத்தையுடையவன்

பொறுமை இல்லாதவன். பலதிறப்பட்ட உண்மைகளின் வேறுபாடுகளான எல்லாவற்றையும் பற்றி நின்றும், பற்று இன்றி நிற்கின்ற பொருளான மெய்ப்பொருள்மேல் பற்று கொஞ்சமேனும் இல்லாத பயனிலி. பொல்லாதவன், உனது

எல்லையில்லாத அழகிய சொற்களுடன் கூடிய புகழைக் கற்கும். கல்ஞானம் இல்லாதவன், குறுகிய புத்தியையுடையவன், மட்டமானவன (மூடன்) நரகதி அடையும் பேறு இல்லாதவன் ஆகிய நான், உனது வெட்சிமாலை அணிந்த அழகிய புயமலைகளையும, ஒளி வீசுகின்ற வேலாயுதத்தையும்

கதிரையும் சக்ரப் பொற்றையு மற்றும்
பதிகரும் பொற்புக கச்சியு முற்றும
கனவிழும் சித்தத்திற கருதிக் கொண்டு அடைவேனே (மு)

குரை தரும சுற்றுச் சதத சமுத்ரங்
கதறி வெந்து உட்க, கண்புர துட்டன்
குலம் அடங்கக் கெட்டு ஒட்டு அழியச், சென்று ஒரு நேமிக்

குவடு ஒதுங்கச் சொர்க்கத்தா ரிடுக்கங்
கெட, நடுங்கத திக்கிற் கிரி வர்க்கம்,
குலிச துங்கக் கைக் கொற்றவன் தத்தம் குடியேறத்

தரை விசும்பைச் சிட்டித்த இருக்கன்
சதுர்முகன் சிட்சைப் பட்டொழியச், சரு
தமும் வந்திக்கப் பெற்றவர் தத்தும் பகை ஓடத்

தகைய தண்டைப் பொற் சித்ர விசித்ரந்
தரு சதங்கைக் கொத்து ஒத்து முழக்கும்
சரண கஞ்சத்திற் பொற் கழல் கட்டும் பெருமானே (மு)

கதிர்காமத் தலத்தையும், பூமியில் உள்ள மலைகளையும், மற்றுமுள்ள தலங்களையும், அழகு வாய்ந்த கச்சிப் பதியையும், ஏனைய திருத் தலங்களையும், கனவிலும் மறவாது எனது சித்தத்தில் தியானித்துக் கொண்டு உன்னை அடைய மாட்டேனோ?

1) ஒலிக்கின்றதும் சுற்றியுள்ளதுமான ஏழு கடல்களும் கதறி வெந்து அகழவும் 2) (குணம்) பெருமை தங்கிய வீரமகேந்திரபுரத்தில் இருந்து துஷ்டன் சூரன், அவனுடைய குலம் முழுவதும் அழிந்து ஒழியவும், 3) போய் ஒரு சகர

வாளகிரியும் ஒதுங்கி நிற்கவும் 4) தேவர்களின் துன்பம் தொலையவும், (5) திசைகளில் உள்ள மலைக் கூட்டங்கள் நடுக்கம் அடையவும் 6) குலிசாயுதத்தை ஏந்திய கையை உடைய அரசனும் இந்திரன் தனது ஊரில் குடியேறவும்

7) மண்ணுலகையும் விண்ணுலகையும் படைத்த இருக்கு ஆதிய வேதங்களில் வல்ல நான்முகன் தண்டனை அடைந்து விலகவும் 8) எப்போதும் வணங்கப்படுபவர்களாம் தேவர்களுடைய பகைவர்கள் ஓட்டம் பிடிக்கவும்

9) அழகிய தண்டையும், பொன்னாலாய அழகிய விசித்திரமான சதங்கைக் கூட்டமும் தாள ஒழுங்குடன் ஒலி செய்யவும் திருவடித் தாமரையில் அழகிய வீரக்கழலைக் கட்டின பெருமானே.

(436) சங்கராபரணம் (16) 436 ஆதி-2களை 35

புன மடந்தைக்குத் தக்க புயத்தன்
குமரன் என்று எத்திப் பத்தர் துதிக்கும்
பொருளை, நெஞ்சத்துக் கற்பனை முற்றும் பிரி(யு)மதும்
புகலும் எண்பத்தெட்டு எட்டு இயல தத்வம்
சகலமும் பற்றிப் பற்றற நிற்கும்
பொதுவை, என்று உய்க்கத் தகுதது நா அத்தம் தனைநாளும்

சினமுடன் தர்க்கித்துச் சிலுகிக்கொண்டு
அறுவரும் கைக்குத்துகிட்டு உருவாகத்
தெரி(வு) அரும் சத்யத்தைத் தெரிசித்து உன் செயல் பாடித்

திசை தொறும் கறவிகளைக்கு, இனி அற்புத
திருவுளம் பற்றிச், செச்சை மணக்கும்
திரு சதங்கைப் பொற்பதமும் எனக்கு என்று அருள்வாயே (மு)

கன பெரும் தொப்பைக்கு எள் பொரி அப்பம்
கனி கிழங்கு இக்குச் சர்க்கரை முக்கனி
கடலை கண்டு அபயிப் பிடுபொடு மோதகம் திருவாயன

கவள துங்கக் கைக கறபக முகனை
திகழும் நம் கொறறதது உற்றை மருபன்
கரிமுகனை சித்ர பொற புகர் வெற்பன்தனை ஈனும

(436) திணைப்புனத்து மடந்தை வள்ளி நாயகிக்கு தக்கதான புயங்களை உடையவன். குமரன என்று (துதித்து) போற்றிப் பக்தர்கள் துதிக்கின்ற பரம்பொருளே மனத்திற் கொண்ட கற்பனைகள் முழுமையும், பிறவான பலவற்றையும்,

சொல்லப்படுகின்ற (36+60) தொண்ணூற்றாறு வகையான தத்வங்களும் ஆக எல்லாவற்றையும், பற்றியும் பற்றற்றும் நிற்கின்ற பொதுப்பொருளே (என்று சூரியன்) சூரியனுக்கு நிகரான ஒளியைக் கொண்ட ஒப்பற்ற (அததம்தனை) பொருளை, செல்வத்தை நாள்தோறும்

கோபத்துடனே பேசிச் சண்டையிட்டு, அறுவகைச் சமயத்தாரும் கையால் குத்திக்கொண்டு வாதித்தும், ஒருவருக்கும் தெரிதற்கு அரிதான சத்யப் பொருளைத் தெரிசனம் செய்து, உன் திருவிளையாடல்களைப் பாடி

திசைகள் தோறும் உள்ளவர்கள் யாவர்க்கும் எடுத்து உபதேசிக்க. இனி நீ சிறிது திருவுளம் வைத்து (தயை கூர்ந்து) உனது வெட்சி மாலை மணம் வீசுகின்றதும், சிறிய சதங்கைகளை அணிந்துள்ளதுமான அழகிய திருவடித் தாமரையை எனக்கு என்று அருள் புரிவாய்

கனத்த பெரிய தொப்பைக்கு என, பொரி, அப்பம், பழங்கள், கிழங்குகள், கரும்பு, சர்க்கரை, தேங்காய், கடலை, கற்கண்டு முதலியவைகளை வாரியுண்டு பிட்டுடன் விழுங்கும் திருவாயை உடையவர்

சோற்றுக் கவளத்தை உட்கொள்ளும் தூய தும்பிக்கையை உடையவர், கற்பக விநாயகர், முக்கண்ணர், விளங்கும் நமது வீரம் வாய்ந்த ஒற்றைக் கொம்பர், யானைமுகத்தினர், அழகிய பொலிவுள்ள புள்ளிகளையுடைய மலைபோன்றவராகிய கணபதியை ஈன்ற

பனவி,ஒன்று எட்டுச் சக்ரதலப் பெண,
கவுரி, செம்பொற் பட்டு உத்தரியப் பெண்
பழைய அண்டத்தைப் பெற்ற மடப்பெண், பணிவாரைப
பவ தரங்கத்தைத் தப்ப நிறுத்தும்
பவதி, கம்பர்க்குப் புக்கவள் பக்கம்
பயில், வரம் பெற்றுக், கச்சியில் நிற்கும் பெருமாளே

(437) பழந்தொரி (5) 437 (✓) 120

பொகுப் பை, கத்தத் தொக்குப்பைக குத்துப
பொய்த்து எத்துத் ததுக் குழல் பேணி
பொசகைப் பிசசு அறபக் கொசசைச சொற கற்றுப்
பொற் சித்ரக் கச்சுக் கிரியார் தோய

துக்கத் துக்கத்திற சிக்குப்பட்டு இட்டு
துக்கித்து எய்த்துச் சுழலாதே
சுத்தச் சித்தத்துப் பத்திப் பத்தாக்கு ஒத்
துச் சற்று அர்ச்சிக்கப் பெறுவேனோ

திகைத் திக்கற்றுப் பைத தத்து அதத்திக்குச
செற, பத்ரக் கொககைப பொரும் வேலா

மாயப்பனி. நவசகர பீடத்துப் பெண், கவுரி, செவ்விய அழகிய பட்டாலாய மேலாடை அணிந்துள்ளவள், பழமையானவள், அண்டங்களை ஈன்றவளுமாகிய மட மங்கை. தன்னை பணிவாருடைய பிறப்பு என்னும் அலகடலை விலக்கி நிறுத்தும் தேவி, ஏகாம்பர நாதரை அடைந்தவள (மணந்தவளாம்) காமாக்ஷியம்மையின் அருகில் இருக்கும்படியான வரத்தைப் பெற்று கச்சியில நின்றருளும் பெருமானே

437

(437) குற்றம் நிறைந்த பை. (கத்தம். மலம்) மலம் கூடின பை. (குதது) சுடு சொல் பொய்யொடு கலந்து, (எத்து) வஞ்சகம் (சூதது) ஆபதது இவையெல்லாம் கூடிய குகைசயாகிய உடலை விரும்பி குறறமானதும வைதததும கொண்டதும. அற்பமானதும், இழிவானதுமான சொறகளைக் கூறு, அழகிய விசித்திரமான ரவிகைக பூண்ட மலை போன்ற கொஙகைகளை உடைய மாதாகளை ச சேர்வதால் வரும்

பெருந்துககத்தில சிககிக்கொண்டு வேதனையுறறு இளைததுச சுழறசி(யுறு)மல் - சஞ்சலப்படாமல

தூய உளளத்துடன் பத்தி பூணட பததாகளுக்கு இணையாத நான் அழுகி, சிறிதளவேனும் உனைப் பூசிக்கும் பாக்கியததைப பெறுவேனோ!

எந்தத திக்கிலும் (திக்கு) உதவி இல்லாது பேய் தணிப்பட்டு. பசிய அலைகள வீசுகின்ற கடலுககுட் சென்று, இலைகளொடு கூடிய மாமரமாக நின்ற சூரனொடு போர புரிந்த வேலனே

செய்ச் சொர்க்கத்துச் செம்பொற் தந்தைக்குச்
செச்சைக் கொத்து நப்பித்து அணிவோனே

கக்கு அக்கைத் தக்க அக்கக்கட்கு அக்கு அங்கிக
கண் கத்த அத்தாக்குப் பெரியோனே

கற்றைப் பொற்று ஏத்தப் பெற்றப், பொற சிற்பக்
கச்சிக்குள் சொக்கப் பெருமானே

---

(438) லதாங்கி (7) (ப) 1300 438

மக்கடகுக் கூற அரிதானது
கற்று எட்டத்தான் முடியாதது
மற்று நப்புக்கு யாதும் ஆவாதது மனதாலே
மடடு இடடு தேட நுணைதது
நத்வத்திற் கோவை படாதது
மத்தப பொற் போது பகீரதி மதிகுடும்

முக்கட பொற்பானா உசாவிய
ஆத்தகுப் போதகமானது
முதிக்குக காரணமானது பெறல் ஆகா

செவ்விய தேவலோகத்தில் வளர்ந்த செம்பொன் போன்ற
இனியவளை தேவசேனையை வெட்சி மலர்க் கொத்தால
அலங்கரித்து மாலை சூட்டுபவனே
[பிரமன் முதலியோர சரீரத்தினின்றும்] (ககு) சூழன்ற (அக்கை)
எலும்பை, தக்க அங்கங்களில, (அக்கு) ஆபரணமாக அணிந்த
அக்கினிக் கண்ணை உடைய தலைவராகிய சிவபெருமானுக்கு
குருநாதனும் பெரியோனே!
திரளான (நிரம்பிய) போற்று- துதிப்பாடல்களால ஏத்தப் பெற்ற
அழகிய சிறப்ப வேலைகள காணக்கூடிய கச்சிககுள அழகிய பெருமாளே

438

(438) மக்களுக்கு அது (பரம பொருளின் தன்மை) இத்தன்மையது என்று
எடுத்துக் கூறுதற்கு அரிதானது, கற்ற கல்வியினாலும் அதனை
எட்ட முடியாதது; மறுபடி அதற்கு ஒப்பாக ஒன்றையும் சொலல
முடியாதது, மனத்தினால்
அளவிடுத் தேடி அறிய முடியாதது, எத்தகைய அறிவு ஆராய்ச
சிக்கும் ஒரு வழியான வரிசையில அமையாதது ஊமத்தை மலரை
யும்- பொன்னிறப் பூவாம் கொன்றையையும, கங்கையையும்
நிலவையும அணிகின்ற
மூன்று கண்களையுடைய அழகராகிய சிவபெருமான் சொல்லுக
எனக் கேட்ட, (அர்த்தக்கு- ஆத்தத்துக்கு) பொருளுக்கு ஞான
காரணமாக இருப்பது, மோட்சத்துக்குக் காரணமாக
விளங்குவது, பெறுதற்கு முடியாததாய்

முட்டர்க்கு எட்டாதது, நான்மறை
எட்டிற்று எட்டாது எனவே வரும்
மூற்பட்டு அப்பாலையில் ஆவது — புரிவாயே (மு)

செக்கட் சக்ராயுத மாதுலன்
மெச்சப் பூற் போது படாவிய
திக்கும் பொற் பூதரமே முதல — வெருவும்
சிட்டித்துப் பூத பசாசுகள்
கைக்கொட்டிட்டு ஆட, மகோததி
செற்று, உக்ரத் தானை மார்பக — முது சோரி

கக்கக் கைத்தாமரை வேல விடு
செச்சைக் கற்பூர புயாசல,
கச்சு உறைய பார பயோதர — முலையாள் முன்

கற்புத் தப்பாது உலகு ஏழையும்
ஒக்க பெற்றுள் விளையாடிய
கச்சிக் கச்சாலையில் மேவிய — பெருமானே (மு

(439) பெருக — 439 — (6) — (ு) 1½+1½+3

முட்டுப் பட்டுக — கதி தோறும்
முற்றச் சுற்றிப் — பல நாளும்
தட்டுப் பட்டுச் — சுழல வேனச்
சுற்றுப் புற்றக — தருதாதோ

டோர்களுக்கு எட்டாததாய் இருப்பது, நான்கு வேதங்களுக்கும் எட்டியும் எட்ட முடியாது நிற்கும் பொருள், முதன்மையான நிலைக்கும் அப்பாலான பொருள் எதுவோ அந்தப் பொருளினைக்கு உபதேசித்தனே

சிவந்த கண்களையும், சக்ராயுததனதயும் கொண்ட மாமன மெச்சிப் புகழ. புல்லும் மலரும் படரும்படி (வியம்) பெரிய திக்குக ளில் உள்ள மேரு முதலான பலபல உருவபேதங்களை •

படைத்து, பூதங்களும். பேய்களும் கை கொட்டி அரவாரித்து ஆடவும, (மக உததி) பெரிய கடலை அடக்கியும், கருமையுடைய சூரனு டைய மார்பிடம, முறறின ரத்தத்தை

சொரியுமாறும் செய்த தாமரை மலர் போன்ற கரத்தினாறும வேலாயுதததைச் செலுத்தின, சந்தனக் குழம்பு, பச்சைக் கறபூரம் இவை தமைப் பூசியுள்ள மலை போனற தோளகளையுடையவனே!

ரவிகை பொருந்தியதும, கனமானதும, பால் கொண்டதுமான கொங்கைகளையுடையவளும், முன்பு 32 நாள்

கறபு நிலை தவறுமல, உலகு ஏழையும 32ங்கே ஈனறவளுமான காமாக்ஷி தேவி திருவிளையாடல் புரிந்த, கச்சிப் பதியில், கச்ச பேசுரம் என்ற திருககோயிலில வீற்றிருக்கும பெருமானே.

---

(439) 439

சஙகடப்படு, தேவ, மனித, நரக, விலங்கு எனனும நாறு கதிகளிலும

பிழைமையும் அலைநது பல நாளும்

தடுமாறுதல அடைநது சுழல்கின்ற என்னை

கொஞசம கவனித்து ஆண்டு கொளள எணணலாகாதோ,

வடடப் புட்பத்	தவசீதே
வைக்கத் தக்கத	திருபாதா
கட்டத்து அம்றத்து	அருள்வோனே
கச்சிச் சொக்கப்	பெருமானே

(440) ஆபோகி (16) லகு ஆதி-2 களை 440

வம்பு அரும்சில கனைமிடுரு கும	
யத்துக் கத்துத்	திரையாளா
வன கவாத்திரள தண்ணே அகன்று ம	
ணத்திறு பறறு அறறு	அருளாலே
தம பராக்கு அற நினை உணர்ந்(து) உரு	
திப் பொற் பத்மக்	கழல சேரவார் (தும)
தங்குழாத்தினில எனையும் அணபொடு	
வைக்கச் சற்றுக்	கருதாதோ
வெம பணக்ரம மின் அயில கொண்டு உரு	
வெற்புப் பொட்டுப் பட	மாதூர
வென்ற பார்த்திப புனனிரு திண்புய	
வெடசிச் சித்ரத	திருமார்பா
கம்பராயப் பணி மன்னு புயம பெறு	
கைககுக் கற்புத்	தவறுதே
கம்பை ஆற்றினில் அன்னை தவமபுரி	
கச்சிச் சொக்கப்	பெருமானே

வட்டமாகிய இருதய கமல பீடத்தின் மேலே
வைத்துப் பூசிக்கத் தக்க அழகிய திருவடிகளை உடையவனே
துன்பப்படும் (அறம்) சமயத்தில் அருள்புரியவனே
கச்சியில வீற்றிருக்கும அழகிய பெருமானே

440

(440) வம்பு வார்த்தைகள் நீங்காததும, (அனேகர்கள் அருளிச் செய்த நூல்களி
லிருந்து) சில பழைய சொற்களைத் திருடுவதுமான சமய வாதஞ் செய்து
(திரை:அலை) கூச்சல கடலலை ஒலியைப் போல எழுப்புவோருடைய
வலிய கலைக கூட்டத்தினின்றும விலகி, மனதில உள்ள பற்றுக்கள்
அனைத்தும் அறப்பெற்று, (உனது) திருவருளாலே
தம்மைத் தாமே நோக்கியுள்ள "யாம்" எனனும நோக்கம அற, உன்னை
உணர்ந்து உள்ளம் உருகி உனது அழகிய தாமரை போன்ற திருவடியைச
சேர்பவர்களுடைய (சிந்திப்பவர்களுடைய)
கூட்டத்தினில் எனனையும அன்புடன கூட்டி வைக்கச சிறிதளவு
உனது உளளத்தில நினைக்கலாகாதா!
மிக்க ஆற்றலும ஒளியும் கொண்ட, வேல் கொண்டு எய்யப்புற
கிரவுஞ்சமலை பொடிபட, மா மரமாய் நின்ற சூரனை
வென்ற அரசே! பன்னிரண்டு வலிமை மிக்க தோள்களை உடையவனே!
வெட்சி மாலை அணிந்த அழகிய சிறந்த மார்பனே!
ஏகாம்பரர் எனனும் பெயருடையவராய விளங்குபவரது, பாம்புகள்
நிறைந்துள்ள தோள்களைத் தழுவும பொருட்டு கற்பு நிலை தவறாமல்
கம்பை யாற்றங்கரையில அன்னை பார்வதி தவம செய்தி
ருந்த கச்சியில வீற்றிருக்கும அழகிய பெருமானே

திருவானைக்கா 441

பூபாளம் (6) (+) /4 திஸ்ர நடை

அனித்தமான ஊன் நாளும் இருப்பதாகவே நாசி
அடைத்து வாயு ஓடாத வகை சாதித்து
அவத்திலே குவால்மூலி புசித்து வாடும ஆயாச
அசட்டு யோகி ஆகாமல் மலமாயை

செனித்த காரியோபாதி ஒழித்து, ஞான ஆசார
சிரத்தையாகி யான வேறு என் உடல் வேறு

செகத்தி யாவும் வேறாக நிகழ்ச்சியா மன அதீத
சிவ சொரூப மாயோகி என ஆள்வாய்

தொனித்த நாத வேய் ஊது சகஸ்ர நாம, கோபால
சுதற்கு, நேசம மாருத மருகோனே

சுவர்க்க லோக மீகாம, சமஸ்த லோக பூபால,
தொடுத்த நீப, வேல் வீர, வயலூரா

மனித்தா ஆதி சோணாடு தழைக்க மேவு காவேரி
மக பரவாக பானீயம் அலைமோதும

(441) நிதயமில்லாத (அழியக் கூடிய) இந்த உடம்பு (நாளும்) என்றும்
நிலைத்து இருக்க வேண்டி, மூக்கை அடைத்து மூச்சு ஓடாத
வகையை அப்யசித்து (நிறைவேற்றி)

பயனில்லாத வழியிலே நின்று (குவால்) நிரம்ப மூலிகைகளை
உண்டு, வாடுகின்ற அறிவும் மூடத்தனமும் உள்ள யோகியாக
ஆகாமல், மூல மலமாகிய ஆணவம் மாயாமலம் அதனின்றும்
தோன்றிய கன்ம மலம்

இவைகளால் தோன்றுகின்ற காரியங்களையும் (வியாதி) வேதனை
களையும் ஒழிந்து, ஞானம், ஆசாரம், சிரத்தை இவைகளைக் கொண்ட
வனாகி, ஆன்மாவாகிய நான் வேறு எனது உடல் வேறு

உலகிலுள்ள ஆன்மாக்களெல்லாம் வேறு என்று பிரித்துணர்ந்து
அவ்வறிவு மயமாகவே திகழ்கின்றதும், மனதிற்கு எட்டாததுமாய்
விளங்கும் 'சிவ சொரூப மஹாயோகி' என நான் ஆகும்படி
என்னை ஆண்டருள்க.

ஒலி தரும் இசையுடன் கூடிய புல்லாங்குழலை ஊதுபவரும், ஆயிரம்
நாமங்களை உடையவரும், நந்த கோபாலனுடைய புதல்வருமாகிய
திருமாலுக்கு அன்பு மாறுபடாத மருகனே

பிறவிப் பெருங்கடலினின்றும் ஆன்மாக்களை முத்திக்கரை சேர்க்கும்
மாலுமியே! சகல லோகங்களையும் புரக்கும் அரசே! அழகாகத்
தொடுத்த கடப்ப மாலையை அணிபவனே! வேல வீரனே! வயலூர் என்னும்
திருத்தலத்தில் எழுந்தருளியிருப்பவனே!

மனிதன் ஆகிய ஜீவ வர்க்கங்கள் உள்ள சோழநாடு தழைக்க வரும்
காவேரியாற்றின் மகா வெள்ள நீரின் அலைகள் மோதுகின்றதும்

மணத்த சோலை சூழ் கானவ அனதது லோகம் ஆள்வாரும
மதிதத சாமியே தேவர் பெருமாளே.

(442) ஹம்ஸாநந்தி (7½) (ர) 1½+1½+1½+2 442

நால மறைகள் அறைகின்ற ஒன்று அது,
மேலை வெளியில் ஒளிரும் பரஞ்சுடர்,
ஓது சரியை க்ரியையும புணர்ந்தவர் எவராலும்

ஓத அரிய துரியம் கடந்தது
போத அருவ சுருபம ப்ரபஞ்சமும
ஊனும் உயிரும முழுதும கலந்தது, சிவஞானம்
சால வுடைய தவர் கண்டு கொண்டது,
மூல நிறைவு குறைவின்றி நின்றது,
சாதி குலமும் இலது, அன்றி அன்பர் சொன்ன வியோமம

சாரும் அநுபவர் அமைந்து அமைந்த, மெய
வீடு பரம சுக சிந்து, இந்த்ரிய
தாப சபலம் அற வந்து நின் கழல பெறுவேனோ (மு)

பால குமர, குக, கந்த, குன்றெறி
வேல, மயில என வந்து கும்பிடு
வான விபுதாபதி இந்தரன் வெந்துயர் களைவோனே

நறுமணம் கமழும் சோலைகள் சூழ்ந்துள்ளதுமான திருவானைக்கா

வில் எழுந்தருளியுள்ள, சகல லோகங்களை ஆள்பவரும் மதித்து

வணங்கும் தெய்வமே! தேவா பெருமானே!

(4-2) நின கழல்: முருகன் திருவடியானது, 442

(எங்கும் என்று தேடி) ஓலமிடுகின்ற வேதங்களால் பேசப்படு

கின்ற அப்பற்றது, பராகாசத்தில் - ஞானகாசத்தில் விளங்கும் பரஞ்

சோதி, நூலகளில சொல்லப்படும் சரியை, கிரியை, யோகம் எனனும்

மார்க்கத்தை அநுசரித்தவர்கள் எவராலும்

சொல்லுதற்கு அரிதாகிய துரிய நிலையை (யோகியர் தம மயமாய்

நிற்கும் உயர நிலையை)க் கடந்து நிற்பது, அறிவு, அருவம், உருவம்

உலகு, உடல், உயிர இவை எல்லாவற்றிலும கலந்து நிறபது; சிவஞானம

நிரம்ப உடைய தவத்தினர் கண்டு கொண்டது மூலப்பொருளாய்,

நிறைந்துளளதாய்க் குறைவே இல்லாது நிற்பது. சாதி, குலம்

இவை இல்லாதது, மேலும், அன்புள்ள அடியாரகள சொன்ன

ஞானகாசத்தை

சார்ந்துள்ள அநுபவ சீலர்கள், மனம பொறி புலனகள ஒடுங்கிப்

பொருந்தியுளள, உண்மையான மோக்ஷ வீடாம பரம சுகக் கடல

போன்றது இத்துணை பெருமை வாய்ந்த நின் கழல; இந்திரி

யங்களால் (ஐம்புலன்களால) உண்டாகின்ற தாபங்களும்

சபலங்களும ஒழிய, அந்த நின கழலைப் பெறுவேனோ!

இளங் குமரனே! குகனே! கந்தனே! கிரௌஞ்ச மலையை அழித்த

வேலாயுதனே! மயிலனே என்று துதித்து வந்து கும்பிட்ட வானுலக

தேவாகளின தலைவனா இந்திரனுடைய கொடிய துயரை நீக்கினவனே

வாசு கனப, வர துங்க மங்கல
வீர கடக புய சிங்க, சுந்தர,
வாகை புனையும் ரண ரங்க புங்கவ, — வயலூரா

ஞால முதல்வி. இமயம் பயந்த மின்,
நீலி. கவுரி, பரை. மங்கை. குண்டலி
நாளும் இனிய கனி, எங்கள் அம்பிகை — த்ரிபுர ஆயி

நாத வடிவி. அகிலம பரந்தவள்.
ஆவின் உதரம உள பைங்கரும்பு, வெண
நாவல் அரசு மனே, வஞ்சி, தந்தருள் — பெருமாளே.

---

(443) ரஞ்சனி (8) (ச)(2+1+1½+1½+2) 443.

குருதி புலால் என்பு தோல் நரம்புகள்
கிருமிகள் மால் அம் பிசிதம மண்டிய
குடர் நிணம் ரோமங்கள் மூளை என்பன — பொதி காயம்
குடில் இடை ஓர் ஐந்து வேடர் ஐம்புல
அடவியில் ஓமெ துராசை வஞ்சகர்
கொடியவர் மா பஞ்ச பாதகம் செய — அதனாலே

நறுமணம் வீசும் சந்தனத்தை அணிந்தவனே! சிரேஷ்டமானதும், பரிசுத்தமானதும், மங்களகரமானதுமான வீர கடகத்தை அணிந்த திருப்புயத்தை உடைய சிங்கமே! அழகனே! போர்க்களத்தில் சிறந்த வீரசிகாமணியே! வயலூரில் வாழ்பவனே!

உலகங்கட்குத் தலைவி, இமவான் பெற்ற மின்னல் போன்ற ஒளியுடையவள், நீல நிறமுடையவள், பொன்னிறமுடையவள், பராசக்தி, மங்கை, குண்டலி சக்தியாக விளங்குபவள், என்றும் இனிய கனி போன்றவள், எங்கள் அம்பிகை: மூன்று உலகங்களையும் பெற்றவள்,

நாத வடிவாக விளங்குபவள், எங்கும் நிறைந்தவள் ஆலிலை போன்ற வயிற்றை உடைய பசிய கரும்பு அனையவள், வெண்ணாவல் மரத்தின் கீழ் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் மனைவி, வஞ்சிக்கொடி போன்றவருமாகிய அகிலாண்ட நாயகி தந்தருளிய பெருமானே!

443

(443) ரத்தம், ஊன், எலும்பு, தோல், நரம்புகள், புழுக்கள், (மல) காற்று (அம)நீர், (பிசிதம்) இறைச்சி இவைகள் நிரம்பிய குடல், கொழுப்பு மயிர், மூளை என்பனவாகிய இவைகள் நிறைந்த உடல் என்னும்

குடிசையுள் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளாகிய வேடர்கள், ஐம்புலக (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்), கானகத்தில் ஓடுகின்ற. கெட்ட ஆசை கொண்ட வஞ்சகர்கள் பொல்லாதவர்கள், கொடிய பஞ்ச பாதகங்களை (கொலை, பொய் களவு, கள்ளுண், குருநிந்தை எனப்படும் கொடிய பாவச் செயல்களை செய்ய, அதன் விளைவாக

சுருதி புராணங்கள் ஆகமம் பகர்
சரியை, க்ரியா, அண்டர் பூசை, வந்தனை,
துதியொடு நாடும் தியானம் ஒன்றையும் முயலாதே

சுமடமதாய் வம்பு மால் கொளுந்திய
திமிரரொடே பந்தமாய் வருந்திய
துரிசு அற ஆனந்த வீடு கண்டிட அருள்வாயே (சு)

நிருதனி வேல் கொண்டு நீள க்ரவுஞ்சமும
நிருதரும் மாவும கலோல சிந்துவும்
உடைபட மோதும் குமார பங்கய கரவீரா
உயர் தவர், மா உம்பர் ஆன அண்டர்கள்,
அடி தொழுதே மன பராவு தொண்டர்கள்
உளம் அதில் நாளும் குலாவி இனபுற உறைவோனே

கருதிய ஆறு அங்க வேள்வி அந்தணர்
அரிகரி கோவிந்த கேசவ என்று இரு
கழல தொழு சீரங்கராஜன அன்புறு மருகோனே

கமலனு ஆகண்டலாதி அண்டரும
எமது பிரானென்று தாள வணங்கிய
கரிவனம் வாழ சம்பு நாதா தந்தருள பெருமானே-

வேதங்கள், புராணங்கள், ஆகமங்கள் என்ற அறிவு நூல்களால் சொல்லப்படுகின்ற சரியை, கிரியை, தேவர் பூஜை, வழிபாடு தோத்திரம் இவை கொண்டு நாடிச் செய்யும் தியானம் முதலிய வைகளில் ஒன்றையேனும் முயற்சி எடுத்துக் கொண்டு அநுட்டிக்காமல் அறிவிலியாய், (வம்பு) பயனிலாததும், ஆசைகளை எழுப்புவதுமாய ஆணவ இருள் மூடியவர்களுடன் கூடுறவாய் வருந்திய குற்றம் தொலைய, பெரிய வீட்டை யான் காணும்படியாக அருள்புரிவாயாக.

ஒப்பற்ற ஒரு வேலாயுதத்தால் பெரிய கிரவுஞ்ச மலையும், அசுரர் களும், (சூரனாகிய) மாமரமும், அலை வீசும் கடலும் உடைபட்டு அழிய போர் புரிந்த குமரனே! தாமரையனைய திருக்கரங்களுடைய வீரனே

உயர்ந்த தவசிகள் சிறந்த மேலுலகத்துள்ள தேவர்கள், (உனது) திருவடியைத் தொழுது (மன) நனருகத் துதி செய்யும் அடியார்கள் - ஆகியோர் தம் உள்ளத்தில் நாள் தோறும் விளையாடி மகிழ்ச்சி யுடன் வீற்றிருப்பவனே!

ஆய்ந்து அறிந்த ஆறு அங்கங்கள (நிருத்தம், ஜோதிடம், சிட்சை வியாகரணம், கற்பம், சந்தஸ்) யாகங்கள் இவைகளில் வல்ல அந்த ணர்கள், "ஹரி ஹரி கோவிந்தா கேசவா" எனக் கூறித் துதித்து இரு திருவடிகளிலும் தொழப்படுகின்ற ஸ்ரீரங்கராஜனாகிய திருமால் அன்பு கொள்ளும் மருகோனே!

பிரமனும் இந்திரன் முதலிய இமையவர்களும், எமது தலைவன் என்று திருவடியில் வணங்கப் பெற்ற, திருஆனைக்காவில் வாழ் கின்ற ஜம்புநாதா என்னும் பெருமானே!

444) சுத்த சாவேரி (6) (ப) ½+1½+3

நாடித் தேடித் — தொழுவார்பால்
நான் நந்து ஆகத் — திரிவேனை
மாடற் கூடற் — பதி, ஞான

வாழ்வைச் சேரத் — தருவாயே
பாடற் காதற் — புரிவோனே
பாலைத் தேன் நதது — அருள்வோனே
ஆடற் தோகைக்கு — இனியோனே
ஆணைக் காவிற் — பெருமானே

445) தேஷ் 7½ 445 (ப) 4+1½+2

பரிமள மிக உள சாந்து மாமத(ம)
முருகு அவிழ் வகை மலர் சேர்ந்து கூடிய
பல வரி அளி துயில் கூந்து, வான் உறு — முகில் போலே
பரவிய இருள் செறி கூந்தல் மாதர்கள்
பரிபுர மலர் அடி வேண்டி ஏவிய
பணி விடைகளில் இறுமாந்த கூளனை — நெறி பேணா

விரகனை, அசடனை, வீம்பு பேசிய
விபுலனை, உறு கலை ஆயுந்திடா முழு
வெகுளியை, அறிவு அது போம் கபாடனை — மலம் மாறு

444

(444) விரும்பித் தேடித் தொழுகின்ற அடியாரிடத்தே
நான் விருப்பம் கொண்டவனாகத் திரியமாட்டேனோ!
மாட கூடங்கள் உள்ள மதுரைத் தலத்தைக் குறிப்பதான
துவாத சாந்த நிலையிற் கூடும் ஞான
வாழ்வினை அடையும்படி அருள் புரிவாயே
பாடலில் ஆசை கொண்டுள்ளவனே
பால் போன்றதும் தேன் போன்றதுமான இனிய அருளைப் புரிபவனே
நடனமாடுகின்ற மயிலுக்கு இனியவனே
திருவானைக்காவில் எழுந்தருளியுள்ள பெருமானே

445

(445) நறுமணம் மிகவும் உடைய சந்தனம், (மான் மதம்) கஸ்தூரி,
வாசனை வீசும் நல்ல மலர்கள் இவைகள் பொருந்திக் கூடின பல
ரேகைகள் கொண்ட வண்டுகள் துயில் கொண்டதும், ஆகாயத்தில்
உள்ள மேகம் போன்றதும்

பரந்துள்ள இருள் நிறைந்ததுமான (மிக்க கருநிறம் கொண்டது
மான) கூந்தலை உடைய மாதர்களின், சிலம்பணிந்த மலர் போன்ற
பாதங்களை விரும்பி, அவர்கள் இட்ட வேலைகளைப் பணியாளனாகச்
செய்வதில் ஒரு பெருமையாகக் கொண்ட பயனற்றவனை,
ஒழுக்க முறையை விரும்பி மேற்கொள்ளாத

தந்திரசாலியை, மூடனை. வீண் புகழ்ச்சி பேசும் உதவாக்கரையை
உள்ள கலை நூல்களை ஆராய்ந்து அறியாத முழுக் கோபக்காரனை
அறிவை ஓடிப்போகுமாறு தப்ப விட்ட காவலாளனை. மும்மலங்கள்
(மாறுதல்) நீங்காத

வினையனை உரை மொழி தோர்ந்த பாவியை
விளி(வு) உறு நரகிடை வீழ்ந்த மோடனை
வினவி, முன் அருள் செய்து பாங்கின் ஆள்வது ஒரு நாளே

கருதலர் திரிபுரம் மாண்டு நீறு எழ
மலைசிலை ஒரு கையில் வாங்கு நாரணி
கழல் அணி மலைமகள் காசி மா நகர — உறை பேதை
கனி மயில், சிவனுடன் வாழ்ந்த மோகினி,
கடல் உடை உலகினை ஈன்ற தாய் உமை
கரிவனம் உறை அகிலாண்ட நாயகி — அருள் பாலா
முரணிய சமரினில் மூண்ட ராவணன்
கிடி என அலறி முன் ஏங்கி வாய்விட
முடிபல திருகிய நீண்ட மாயவன — மருகோனே

முதல் ஒரு குறமகள் நேர்ந்து நூல் இடை
கிருதன கிரிமிசை தோய்ந்த காமுக
முது பழ மறை மொழி ஆய்ந்த தேவர்கள — பெருமாளே

தீவினையாளனை, சொல்லும் சொல் தவறிய பாவியை, இறந்து சேரும் நரகத்தினுட் விழுந்த பேடனை, எங்குள்ளான் இப்படிப் பட்டவன் என ஆய்ந்து கவனித்து, முன்னதாக உனது திருவருளைப் பாலித்து, நன்கு ஆட்கொள்ளும் காலமும் ஒன்று உண்டாகுமோ?

பகைவர்களுடைய திரிபுரங்கள். அழிந்து தூளாக, மேரு மலையை வில்லாக ஒரு கையில் வளைத்த நாரணி சிலம்பு அணிந்த மலைமகள், காஞ்சிமாநகரில் விளங்கும் தேவி (காமாக்ஷி)

மகிழ்ச்சியுடைய மயில்போல்வாள்; சிவபெருமானுடன் வாழும் அழகி; கடலை ஆடையாகக் கொண்ட உலகை ஈன்ற தாய் உமாதேவி, திருவானைக்காவில் வாழ்கின்ற அகிலாண்ட நாயகி அருளிய பாலகனே!

மாறுபட்ட போரில் மூண்டெழுந்த ராவணன், இடியைப் போன்ற ஓசையுடன் அலறியும், அதன் முன்பு கலங்கப்பட்டும் வாய்விட்டு அழ அவனுடைய பல முடிகளையும் அறுத்துத் தள்ளிய நீண்ட திருமேனியுடைய திருமாலின் மருகனே!

முன்பு ஒப்பற்ற குறமகளாகிய வள்ளிபிராட்டியின் நுண்ணிய நூல் போன்ற இடை மீதும் இரண்டு கொங்கையாம் மலைகள் மீதும் முழுகிய விருப்பமுடையவரே! மிகப் பழமையான வேத வாக்கியங்களை ஆராய்ந்துள்ள தேவர்களின் பெருமானே.

446 செஞ்சுருட்டி (20) (+) ஆதி-கண்ட நடை

அருக்கு ஆர் நலத்தைத் திரிப்பார மனத்துக்கு
அருத்த ஆசைப் பற்றித் தளராதே
அடற் காலனுக்கு கடைகால மிதித்திட்டு
அறப் பேதகப்பட்டு அழியாதே

கருக்காரர் நட்பைப் பெருக்(கு) அசரித்துக்
கலிச் சாகரத்தில் பிறவாதே
கருத்தால் எனக்கு இருத்தாள் அளித்துக்
கலைப் போதகத்தைப் புகல்வாயே
உருக்கால் நினைத்திட்டு இருக்கால் மிகுத்திட்டு
உரைப்பார்கள் சித்தத்து உறைவோனே
உரத் தோள் இடத்திற் குறத்தேனை வைத்திட்டு
உளத்து ஓமம் வெற்றிக் குமரேசா
செருக்கா தருக்கிச் சுரச் சூர் நெருக்க(அ)ச்
செருச் சூர மரிக்கப் பொரும் வேலா

திறப் பூதலத்தில் திரள் சோண வெற்பில்
திருக்கோபுரத்திற் பெருமானே

(446) அருமை வாய்ந்த (உடல்) நலத்தைக் கெடுப்பவர்களாம் பொது மகளிருடைய மனதுக்கு உகந்த (மனதுக்கு இன்பம் தருதற்கு வேண்டிய) ஆசை கொண்டு தளர்ச்சி அடையாமலும்.

வலிமை வாய்ந்த காலனுக்கு (என் உயிரைக் கொள்வதற்கு வேண்டிய) அடிப்படையாக கோலி, அதனால், மிகவும் மனம் வேறுபாடு அடைந்து அழியாமலும்

பிறவிக்கு ஏதுவான செய்கையோராது நடவை மிகவும் (கொண்டாடித்) தைக்கொண்டு (கலி) துன்பக் கடலில் வீழ்ந்து பிறவாமலும்

என் மீது திருவருள் வைத்து (எனக்கு) உனது திருத்தாளைத் தந்து கலை ஞானத்தையும் உபதேசித்தருளுவீராக

ஒரு முறை உன்னைத் தியானித்து. உனது இரண்டு திருவடிகளையும் மிகுதியாகத் துதிப்பவர்களுடைய உள்ளத்தில் உறைபவனே!

வலிமை மிகுந்த தோளிலே தேன் போன்ற இனிய வள்ளியை எடுத்துக் கொண்டு மறைந்து ஓடின வெற்றி பொருந்திய குமரேசனே!

ஆணவங் கொண்டு கர்வம் பூண்டு, சுரர்களாகிய (சுர) தெய்வத் தன்மையோரை நெருக்கிய அந்த போருக்கு வந்த சூரபன்மன் இறக்க போர் செய்த வேலனே!

நிலை பெற்ற இப் பூமியில் திரண்டு நிற்கும் திருவண்ணாமலையில் அழகிய கோபுரத்தில வீற்றிருக்கும் பெருமானே

(447) சுந்த்ர கௌனன் 447 (2½) (ம) 1+1½

அழுதும் ஆவா எனத் தொழுதும் ஊடு(ஊ)டு நெகக் .
அவசமாய் ஆதரக் . கடல் ஊடுற்று

அமைவு இல் கோலாகலச் சமய மா பாதகர்க்கு .
அறிய நுண் மோன முத்திரை நாடிப்

பிழைபடா ஞான மெய்ய பொருள் பெறுதே வினைப் .
பெரிய ஆதேச புற புதம் ஆய

பிறவி வாராகரச் சுழியிலே போய் விழ
பெறுவதோ நான் இனிப் . புகல் வாயே

பழைய பாகீரதிப் படுகை மேல் வாழ்வெனப்
படியும் ஆறு ஆயின அத தன சாரம

பருகும் ஆறு ஆனைச திருவ, சோணா அசலப் . .
பரம, மாயூர, வித்தக வேளே

பொழுது சூழ் போது வெறுபு இடி படா பார் முதற்
பொடி படா ஓட முதது ஏறி மீனப்

புணரி கோ கோ எனச் சுருதி கோ கோ எனப் .
பொருதே வேலாயுதப் பெருமானே

(447) அன்பு மேலீட்டால் அழுதும், ஆவா என இரங்கித் தொழுதும், இடையிடையே (பக்தியால்) உள்ளம் நெகிழ்ந்து, தன் வசமற்று அன்பு என்னும் கடலில் திளைத்து

ஆறுதல் (சாந்தம்) இல்லாத ஆடம்பரமுடைய சமய வாதப் பாதகர்களுக்கு அறிய முடியாத மௌனக் குறியைத் தேடி

தவறுதல் இல்லாத ஞானத்தின் உண்மைப் பொருளை (நான்) அடையா மலே, வினைக்கு ஈடாக பெரிய வேறுபாட்டை அடையும் நீர்க்குமிழி போல நிலையாத மாயமான

பிறவியெனும் கடலின் நீர்ச்சுழியிலே போய் விழக் கடவேனோ, நான் இனி, சொல்லியருளுக.

பழைய கங்கையென்னும் நீர்நிலைப் பக்கத்தின் மேல, செல்வக் குழந்தைகளாய்த் தோன்றி. பணிந்து வந்த ஆறு தாய்மார்களின (கார்த்திகை மாதர்களின) முலைப்பாலை

உண்ட ஆறு திருமுகங்கள் கொண்ட குழந்தையே! சிவந்த மலையாகிய திருவண்ணாமலையில் பரமனே! மயில் வாகனனே! ஞான மூர்த்தியாம வேளே!

பொழுது போம் அந்தி வேளையிலே, இரவுஞ்சம் பொடிபட்டு, நமி முதலியவை தாளொழுந்தோட, முத்துக்களை வீசுவதும் மீன்களைக் கொண்டதுமான

கடல் கோ கோ என முறையிட, வேதங்கள் கோ கோ என்று முறையிடச் சண்டை செய்த வேலாயுதப் பெருமானே

448 சரஸ்வதி 448 (10). (ட) 1120

இமராஜன் நிலா அது) எறிக்கும் தனலாலே
இளவாடையும் ஊரும் ஒறுக்கும் படியாலே
சமர் அங்கிய மாரன் எடுக்கும் கணையாலே
தனிமான உயிர் சோரும் அதற்கு ஒரு அருள்வாயே

குமரா முருகா சடிலத்தன குருநாதா
குறமாமகள் ஆசை தணிக்கும் திருமார்பா
அமராவதி வாழ்வு அமரர்க்கு அன்று அருள்வோனே
அருணாபுரி வீதியில் நிற்கும் பெருமாளே

---

449 குந்தல வராளி 449 (3½) (ட) 2+½

இரவியும் மதியும் தெரிவுற எழும், அம்
புவிதனில் இனம், ஒன்றிடு மாதும்
எழில் புதல்வரும் நின்று அழுது உளம் உருகும்
இடர் கொடு நடலம் பல கூற
கருகிய உருவம் கொடு கயிறு விழி கொண்டு
உயிரினை நமனும் கருதா முன்
கவி கொடு பல துன்பமும் அகலிட நின
கழலினை கருதும்படி வாராய்
திருமருவிய திணபுயன, அயன், விரி எண்
திசை கிடுகிட வந்திடு சூரன்

(448) இடம்: பனி 448

பனிக்கு அரசனாகிய சந்திரனானவன் வீசுகின்ற நெருப்பாலும்
மெல்லிய தென்றற் காற்றும் ஊராரும் வருத்துகின்ற தன்மையாலும்
போருக்கென எழுந்த மன்மதன் தொடுக்கும் (மலர்) பாணங்களாலும்
தனித்துக் கிடக்கும் மான் போன்ற இப்பெண்ணின் உயிர் சோர்கின்றதே; அதற்கு ஒரு வழி கூறி அருளுவாயாக
குமரனே! முருகனே! சடைமுடிப் பெருமானுக்குக் குருநாதனே!
குறவர் பெருமகள் வள்ளியின் ஆசையை நிறைவேற்றிய அழகிய மார்பனே
பொன்னுலக வாழ்வை தேவர்களுக்கு அன்று அருளியவனே!
திருவண்ணாமலை வீதியில் வீற்றிருக்கும் பெருமானே

449

(449) சூரியனும் சந்திரனும் தெரியும்படி தோன்றி வரும் இப்பூமியில்
சுற்றத்தவரும், பொருந்தி வாழ்ந்த மனைவியும்

அழகிய மக்களும், சுற்றி நின்று அழுது உள்ளம் உருகும்படியான
வருத்தத்துடன் துன்ப மொழிகள் பல சொல்ல
கறுத்த உருவத்துடனும், நெருப்பு வீசும் கண்களையும் கொண்டு
என் உயிரினைக் காலனும் பிடிக்கக் கருதி வருவதற்கு முன்பாக
கற்ற கல்வியுடன், பல துன்பங்களும் நீங்க, உன் திருவடியிணைகளை நான் தியானிக்குமாறு திருக்கண் பார்த்தருள்வீராக
லக்ஷ்மி பொருந்தியுள்ள வலிமை மிக்க தோள்களையுடைய
நாராயணனும் - பிரமனும் பரந்த எண் திசையிலுள்ளோர்
யாவரும் நடு நடுங்க அந்த சூரனுடைய

திணிபுயம் அது சிந்திட அலைகடல் அஞ்
சிட வலியொடு கன் — றிடும் வேலா
அருமறையவர், அந்தரம் உறைபவர், அன்
புடையவர் உய அன்று — அறம் மேவும்

அரிவையும் ஒரு பங்கு இடம் உடையவர் தங்கு
அருணையில் உறையும் — பெருமானே.

(450) ஸாமா (2½) 450 (—) 1+1½

இரவு பகற் — பலகாலும்
இயல் இசை முத் — தமிழ் கூறி
திறம் அதனைத் — தெளிவாக
திரு அருளைத் — தருவாயே
பர கருணைப் — பெருவாழ்வே
பர சிவ தத்துவ — ஞான
அரன் அருள் சற் — புதல்வோனே
அருணகிரிப் — பெருமானே.

(451) ஸாவேரி (3½) (—) 1½+2 451

இருவர் மயலோ அமளி விதமோ
என்ன செயலோ — அணுகாத

வலிய தோள்கள் அறுபட்டு விழ, அலை வீசும் கடல் அஞ்ச,
வலிமையோடு கோபித்த வேலாயுதத்தை உடையவரே
அரிய வேதங்களில் வல்லவர்களும், வானில் உறையும் தேவர்களும்
அன்புடைய அடியார்களும் பிழைக்கும் வண்ணம் அன்று (முப்பத்
திரண்டு) அறங்களை விரும்பிச் செய்த
தேவி பார்வதியை, ஒரு பாகத்தில், இடப்பக்கத்தில் கொண்ட
வரான சிவபெருமான் வீற்றிருக்கும் திருவண்ணாமலையில் வாழ்கின்ற
பெருமானே

(450) 450

இரவும் பகலும் பலமுறையும்
இயல், இசை (நாடகம்) ஆகிய முத்தமிழாலும் உன்னைப் புகழ்ந்து பாடி
நிலையான பொருள் எதுவோ அது எனக்குத் தெளிவுடன் விளங்க
உனது திருவருளைத் தருவாயே
மேலான கருணையுடன் விளங்கும் பெரிய வாழ்வே
மேலான சிவமயமான உண்மை ஞானப் பொருளே
சிவபெருமான் அருளிய நல்ல பிள்ளையே
திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் பெருமானே

(451) 451
வள்ளி தெய்வயானை இருவரும் உனது அருகில் எழுந்தருளி
யிருப்பதால் அவர்கள் மீதுள்ள மயக்கமோ? அங்குள்ள அனேக
ஆரவாரங்களின் வேறுபாடோ? வேறு என்ன நிகழ்ச்சிகளோ -
(என்ன காரணமோ எனக்குத் தெரியாது) உன்னை அணுக முடியாத

இருடி அயன் மால் அமரர் அடியார்
இசையும் ஒலிதான் — இவை கேளாது
ஒருவன் அடியேன் அலறு மொழிதான்
ஒருவர் பரிவாய் — மொழிவாரோ

உனது பத தூள புவனகிரிதான்
உனது கிருபாகரம் — ஏதோ

பரம குருவாய் அணுவில் அசைவாய்
பவனம் முதலாகிய — பூதப்
படையும் உடையாய் . சகல வடிவாய்
பழைய வடிவாகிய — வேலா
அரியும் அயனோடு அபயம் எனவே
அயிலை இருள மேல் — விடுவோனே
அடிமை கொடு நோய் பொடிகள் படவே
அருணகிரிவாழ் — பெருமானே

(452) பூரவி கல்யாணி (3½) 452 (✓) 2+½

இருவினை அஞ்ச மலவகை மங்க
இருள் பிணி மங்க — மயில் ஏறி
இன அருள் அன்பு மொழிய கடம்பு
வின் அதகும் கொண்டு — அளி பாட

முனிவர்கள், பிரமன், திருமால், தேவர்கள், அடியார்கள் இவ்வளவு பேரும் முறையிட்டலறும் பேரொலியால், எனது சிறுகுரல் மொழிகள் செவியில் விழவில்லை போலும்,

ஒருவனாகிய அடியேன் (தனந்தனியனாய்) இங்கு முறையிட்டலறும் மொழிகளை யாரேனும் ஒருவர் அன்புடன் உன்னிடம் வந்து தெரிவிப்பார்களோ?

(உனது விசுவரூபத்தில்) உனது திருவடி தானானது பூமியில் உள்ள மலைகள் ஆகும்; அத்தகைய பெரியோனே, உனது (திருபாகரம்) திருவருட்தன்மை எத்தகையதோ, அறியேன்

மேலான குருமூர்த்தியாய், அணுவுக்குள் அணுவாக நின்று அதனை அசைவிப்பவராகி, வாயு முதலான ஐம்பூதங்களாம்

ஆயுதங்களை உடையவனே! எல்லா வடிவங்களுமானவனே!

தொன்மையான சொரூபமுடைய வேலனே!

திருமாலும், பிரமனும் அபயம் என்று ஓலமிட, வேலாயுதத்தை திருண வடிவம் எடுத்த அசுரன் சூரன் மீது செலுத்தினவனே!

அடிமையாகிய எனது கொடிய நோய் தானாகுமாறு அருளித் திருவண்ணாமலையில் வாழ்கின்ற பெருமானே.

452

(452) நல்வினை தீவினை என்ற இரண்டு வினைகளும் அச்சியகலவும், மும்மலங்களும் மங்கி அழியவும், அஞ்ஞான இருளும், பிணிகளும் ஒடுங்க (நீ) மயிலேறி

அருள் சம்பந்தமான, அன்பு சம்பந்தமான மொழிகளைக் கூற உனது கடப்ப மலராம (அதகம்) உயிர் தரு மருந்தைக் கொண்டு வண்டுகள் பாட

கரிமுகன் எம்பி முருகன் என அண்டா
   களிமலர் சிந்த   அடியேன் முன்
கருணை பொழிந்து முகமும் மலர்ந்து
   கருகி நடம் கொடு   அருள்வாயே
திரிபுரம் மங்க மதன் உடல் மங்க
   திகழ் நகை கொண்ட   விடை ஏறி
சிவன் வெளி அங்கண் அருள் குடி கொண்டு
   திகழ நடம் செய்து   எமை ஈண
அரசி இடம் கொள் மழு உடை எந்தை
   அமலன் மகிழ்ந்த   குருநாதா
அருணை விலங்கல் மகிழ் குற மங்கை
   அமளி நலம் கொள்   பெருமாளே.

---

(453) ஆரபி   (5) 453 (ம) 2+1½+1½

இருவினை ஊண பசும்பை, கருவிளை கூன, குடம்பை
   இடர் அடை பாழ் பொதும்பு   அகித வாரி

இடைதிரி சோங்கு கந்தம மது அது தேங்கு கும்பம்
   இரவிடை தூங்குகின்ற   பிணம நோவுக்கு

உரு இயல் பாண்டம், அஞ்சு மருவிய கூண்டு, நெஞ்சொடு
   உயிர்குடி போம் குரம்பை   அழியாது: என்று

யானைமுகப் பெருமான், என் தம்பியே, முருக என (அன்புடன் அழைக்க)
தேவர்கள் மகிழ்ச்சியுடன் மலர் பொழிய. அடியேன எதிரே
கருணை பொழிநதும், ஆறுமுகங்களும் மலர்ந்தும், விரைவாக நடனம்
செய்து கொண்டு வந்து அருள் புரிவாயாக
திரிபுரம அழிய மதன் உடல் அழிய, விளங்கும் சிரிப்பைக் கொண்ட
(சிரித்த) இடப வாகனராம
சிவபெருமான, ப்ரகாசமான வெட்ட வெளியிலே, திருவருளுடன் வீற்றி
ருநது, எங்கும் விளக்கம உற நடனம் செய்து, என்னை ஈன்ற
தேவி பார்வதியை இடப்பககம் ஏறறுக்கொணட, மழு ஆயுததை ஏந்திய
எந்தை, மாசற்றவன் மகிழ்நத குருநாதனே!
திரு அண்ணமலை மலையில் மகிழும குறமங்கை யுடன கூடி இன்புற்று
வாழ்கின்ற பெருமானே!

---

(453) இரு வினைகளுக்கும் உறை இடமான புதியவை கரு வளருவதற்கு இடமான
(கூண்) பாத்திரம், கூடு போன்றதும், துன்பங்களையே ...
அடைதது வைத்துள்ள பாழ்படுகின்ற (பொதும்பு) குகையும்,
துன்பக் கடலின்
நடுவே திரிகின்ற மரக்கலம், (கநதம) இநதிரியங்களில், (மது) ருசி
நிறைநதுள்ள குடம், இரவில் தூங்குகின்ற பிணம் போன்றதும்,
நோயினுக்கு
வடிவாய் அமைந்த பாததிரம, ஐம்பூதங்களும பொருந்திய கூடு,
மறைதுடனே உயிரும் (உடல விடடு) வெளியேறும் சிறு குடில்
அழியாமல நிலைதது நிறகுமென்று

உலகுடன் ஒன்று கொண்ட கரும பிராந்து அழிந்து
உன் உபய பதாம்புயங்கள் அடைவேனோ.

அருணையில் தங்கு துங்க கேர, கரஅம்புயங்கள்
அமரர் குழாம் குவிந்து தொழுவாழும்

அடியவர் பாங்க, பண்டு புகல் அகிலாண்டம உண்ட
அபிநவ சார்ங்க கண்டன் மருகோனே

கருணை ம்ருகேந்தர அன்பருடன் உரகேந்த்ரர் கண்ட
கடவுள் நடேந்த்ரர் மைந்த வரை சாடும்

கலப நகேந்த்ர, தந்த்ர, அரச, நிசேந்த்ர, கந்த,
கரகுலிசேந்தரா தங்கள் பெருமாளே.

454 ஆரபி (10) 454 = 3 + 1½ + 2 + ½ + 2

கடல் பரவு தரங்கம மீது எழு திங்களாலே
கருதி கிகை மடந்தைமார் சொல் வதந்தியாலே
வட அனலை முனிந்து வீசிய தென்றலாலே
வயல் அருணையில் வசி போதம் மயங்கலாமோ

உவகததாருடன் இசைந்துள்ள. வினையால் வரும் மயக்கம் ஒழிந்து, உனது இரண்டு பாத தாமரைகளை அடையும் பாக்கியத்தைப் பெறுவேனோ!

திருவண்ணாமலையில், உயர்ந்து ஓங்கின பரிசுத்தமான கோபுரத்தில் உறைபவனே! அமரர்குழாம் தமது தாமரையன்ன கரங்களைக் கூப்பித்தொழ வாழ்கின்ற

அடியார்களின் தோழனே! முன்னொரு காலத்தில் கணக்கிட்டுச் சொல்லப்பட்ட எல்லா அண்டங்களையும் உண்ட, புதுமையானவரும், சாரங்கம் என்னும் வில்லை ஏந்திய (கண்டன்) வீரரும் ஆகிய திருமாலின் மருகனே!

கருணை நிறைந்த மிருக சிரேஷ்டரான அன்பர் புலிக்கால் கொண்ட வியாக்ரபாதருடன், சர்ப்ப சிரேஷ்டராம் பதஞ்சலி தரிசித்த நடனமும் நடராஜப் பெருமானுடைய குமாரனே! மலைகளைத் தூளாக்கும்

தோகை உடைய பக்ஷி சிரேஷ்டனும் மயில வாகனனே! ஆகம நூல்களில் வல்லவரே! அரசே! உண்மையிற் சிறந்தவனே! (சத்திய சிரேஷ்டனே) கந்தனே! கையில வஜ்ராயுதத்தைக் கொண்ட தேவேந்திரர்களுக்குப் பெருமானே!

454

(454) கடலில் பரந்து வரும் அலைகளின் மீதே தோன்றி எழும நிலவாலும் மிகவும நினைத்து பெண்கள தமக்குள் பேசிக்கொள்ளும அரபேச்சாலும் வடவாக்கினியைக் கோபித்து வீசுகின்ற தென்றல் காற்றினாலும் வயல சூழ்ந்த திருவண்ணாமலையில, கொடி போன்ற இந்தப் பெண்ணினுடைய அறிவு கலங்கி வருந்தலாமா?

இடம் உமையை மணந்த நாதர் இறைக்கும் வீரா

ஏழு கிரிகள் பிளந்து வீழ எறிந்த வேலா
அடல் அசுரர் கலங்கி ஓட முனிந்த கோவே
அரி பிரம புரந்தராதியர் தம்பிரானே

(455) சிவரக்சனி (8) (-) ஆதி 455

கயல் விழித்தேன் எனச் செயல் அழித்தாய் எனக்
கணவ கெட்டேன் எனும் பெறு மாது
கருது புத்ரா எனப் புதல்வர் அப்பா எனக்
கதறிடப் பாடையிற் தலை மீதே

பயில் குலத்தார் அழப் பழைய நட்பார் அழப்
பறைகள் கொட்டா வரச் சமனும்
பரிய கைப் பாசம் விட்டு எறியும் அப்போது எனைப்
பரிகரித்து ஆவியைத் தரவேணும்
அயில் அறச் சேவல் கைக்கு இனிதரத் தோகையுற்று
அருணையிற் கோபுரத்து உறைவோனே

அமரர் அத்தா, சிறுக் குமரி முத்தா, சிவத்து
அரிய சொற் பாவலர்க்கு எளியோனே

புயல் இளைப்பாறு பொற் சயில மொய்ச் சாரலிற்
புன மறப் பாவையைப் புணர்வோனே

172

இடப்பாகத்தில் உமையைச் சேர்த்துக் கொண்ட சிவபெருமான் வணங்கும் வீரனே!
ஏழுமலைகளும் பிளந்து வீழும்படி எறிந்த வேலாயுதனே!
வலிமை மிக்க அசுரர்கள் கலங்கி ஓடக் கோபித்த தலைவனே!
திருமால், பிரமன், இந்திரன் முதலிய இமையவர்கட்கு தம்பிரானே -

455

(455) கண் விழித்தேன் (பணிவிடைகள் எத்தனை நாள்) கண் விழித்துச் செய்தேன்; 'எனைச் செயலறுப் போம்படி செய்து விட்டீர்களே' என்றும், 'என் கணவரே! இனி நான் அழிந்து போனேன்' என்றும் கூறி மனைவி அழ, பெற்ற தாய்
என் நினைவிலேயுள்ள மகனே என்று புலம்ப, பிள்ளைகள் அப்பா என்று கதறப், பாடையில் தலைமாட்டுப் பக்கத்தே நின்று
நெருங்கிப் பழகிய உறவினர் அழ, பழைய நட்பினர்கள் அழ, பறைகள் கொட்டி வர, யமனும்
பருத்த கையிலுள்ள பாசக்கயிற்றை என் மீது விட்டு எறியும் அந்தத் தருணத்தில் என்னை யமனிடத்திருந்தும் நீக்கி, உயிரைத் தந்தருளுக
வேலும், தரும நெறியைக் காட்டும் சேவலும் திருக்கரத்தில் இனிது விளங்க, மயிலின் மீது விளங்கித் திருவண்ணாமலையில் கோபுரத்து (வாயிற் பக்கத்தில்) வீற்றிருப்பவனே!
தேவர்களுக்குத் தலைவனே! இளங்குமரியாகிய வள்ளிக்கு முத்துப் போன்றவனே! சிவபெருமானை அருமையான சொற்களால் பாடும் பாவலர்களுக்கு எளிதாக நின்று அருள் புரிபவனே!
மேகங்களைத் தடுப்பாறுகின்ற அழகிய வள்ளிமலையின், நெருங்கிய சாரலில் தினைப்புனம் காத்த வேடப் பெண்மணியை மருவுகின்றவனே!

பொடிபட பூதரத்தொடு கூற் சூரனை
பொரு முழுச் சேவகப் பெருமானே.

(456) மத்யமாவதி (2½) (ம) 1+1½ 456

கரிமுகக் கடக் களிற(து), அதிக கற்பக, மதக
கஜமுகத்து அவுணனைக கடியானை
கடலை எட் பயறு நற் கதலியிற் கனி பலத
கனி வயிற்றினில அடக்கிய வேழம்

அரிமுகத்தினன் எதிர்த்திடு களத்தினின மிகுத(து)
அமர் புரிக கணபதிக்கு இளையோனே

அயில் எடுத்(து) அசுரர வெற்பு அலைவு உறப பொருது
வெற்றியை மிகுத்(த) அறுமுகக் குமரேசா

நரி மிகுக் கிளைகளைப் பரி எனக கடிவளக
கையில் பிடித்து எதிர நடத திடும ஈசனா
நடனம் இப்படி இடதிலும் இசைத்து அரையினிற
கரி உரித்து அணிபவற்கு அருசேயே

துரிபெறச் சரி பொழிற் கன வயறக அழகுள
துரிய மெய்த் தரளம பொய்த்திட வீறிசு

(பூகரம்.மங்) சூரனைக காத்திருந்த ஏழு மலைகள பொடிபடக கடலிலே மாமரமாய் நின்ற சூரனைப் போர்செய்து அடக்கிய பரிபூரண பராக்ரமப் பெருமானே.

---

(456) யானை முகத்தையும், மதத்தையும் கொண்ட யானை, சிறந்த கற்பகம் போன்றவர், மதங் கொண்ட யானை முகத்து அசுரனை (கஜமுகாசுரனை) அடக்கிய யானை,

கடலை, எள், பயறு, நல்ல வாழையின் பழம், பலாப்பழம (இவைகளை) வயிற்றினில் அடக்கின யானை,

[அரி= அழகு. திருச்சந்தி, முகம் இபம்] அழகிய முகங் கொணடவர் (அல்லது, திருச்சந்தியில வீற்றிருப்பவர்) எதிர்த்துப போர் புரியும் போர்க்களத்தில பெரிய போரைச செய்யும கணபதிக்குத் தம்பியே

வேலாயுதத்தைச செலுத்தி, அசுரரின் மலைபோன்ற கூட்டம், அலைசல் உறும்படிச சண்டை செய்து, மிகுந்த வெற்றியைப் பெற்ற, ஆறுமுகங்களையுடைய குமரேசனே!

நரியின பெரிய கூட்டங்களைக குதிரையென ஆக்கிக் கடிவாளத்தைக் கையில பிடித்து (பாண்டியன) எதிரே நடத்தின சொக்கேசர்- தமது திருவிளையாடலை இந்த பூமியில இவ்வாறு நடத்தினவர், மினனும யானையை உரித்து அதன் தோலை இடையில உடுத்தவருமாகிய சிவபெருமானுக்கு அப்பற்ற புதல்வரே!

(துரி சுமை) காய் கறிகளின சுமையால சாய்ந்துள்ள சோலையிலும் பெருமை வாய்ந்த வயலிலும் அழகு உள்ளனவும், தூய வடிவைக் கொண்டுள்ளனவுமான முத்துக்கள் நெருங்கிக கிடக்க, (வீறி) பெருமை மிகுந்து

சுரர் துதித்திட மிகுத்து இயல் தழைத்து அருளையிற்
சுடர் அயிற் சரவணப் பெருமாளே.

(457) ஹம்ஸாநந்தி (7$\frac{1}{2}$) 457 (–) $\frac{1}{2}$+2+4

கருணை சிறிதும் இல் பறிதலை நிசிசரர
பிசித அசன மறவர இவர் முதலிய
கலக விபரித வெகுவித சமயிகள் பலர் கூடி
கவகவென நெறி கெட முறை முறை முறை
கதறி வதறிய குதறிய கலைகொடு
கருத அரியதை விழிபுனல் வர மொழி குழறு/அன்பு
உருகி, உனது அருள் பரவுகை வரில், விரகு
ஒழியில, உலகு இயல் பிணை விடில, உரை செயல்
உணர்வு கெடில், உயிர் புணர் இருவினை அள றுது யோக

உதறில, எனது எனும் மலம் அறில், அறிவினில்
எளிது பெறல் என மறை பறை அறைவது ஓர்
உதய மரணம் இல் பொருளினை அருள்வது ஒரு நாளே

தேவர்கள் துதி செய்ய, மிகப் பிரபலமாய், உனது (கருணைக்) குணம் விளக்கமாய் விளங்கும் திருவண்ணாமலையில், தனி நீசுடர் வேலேந்திய சரவணப் பெருமாளே.

---

(457) கருணை ஒரு சிறிதும் இல்லாதவரும், தலைமயிரைப் பறிப்பவரும், இரவிலே திரிபவரும், புலாலை உண்பவரும், கொலை புரிபவரும், இத்தகைய இழுக்குடையவர் முதலிய கலகமும் விபரீத அறிவும் படைத்த பலபல பிரிவுகளாகவுள்ள பர சமய வாதிகள் பலரும் சேர்ந்து

கலகல என்று இரைந்து, நீதிமுறை தவறி, அவரவர் முறை வரும் போதெல்லாம் பெருங்கூச்சலிட்டுக் கதறி, (அறுதியிட்டு) வாயாடித் திட்டி - நெறி தவறிப் பேசும் கலை நூல்களால் எண்ணுதற்கும் அரியதான பொருளை, கண்களில் நீர் பெருகி வர, மொழி குழறி, அன்பு கொண்டு

உருகி, உனது திருவருளைப் போற்றும் மனநிலை வந்தால், (விரகு) தந்திர புத்தி ஒழிந்தால், உலக சம்பந்தமான கட்டுகள் விட்டால், வாக்கு, செய்கை, மன உணர்ச்சி (மனம், வாக்கு, காயம்) இம்மூன்றின் தொழிலும் அழிந்தால், உயிரைச் சார்கின்ற நல்வினை தீவினை எனும் இரண்டு வினைகளும் (அன்று) சேறு போம்படி

உதறித் தள்ளி, எனது எனது எனும் ஆசையாம் குற்றம் அற்றுப் போனால், பதிஞானத்தால் எளிதாகப் பெறுதல் முடியும் என்று வேதங்கள் பறையறைவது போல் முழங்கிக் கூறுவதான ஒப்பற்ற, தோற்றமும் முடிவும் இல்லாத (அநந்த பேரின்பப்) பொருளை (அடியேனுக்கு நீ) அருள் செய்யும் பாக்கிய நாள் ஒன்று (எனக்குக்) கிட்டுமா?

தருண சததள பரிமள பரிபுர
சரணி, தமனிய தநு தரி, திரிபுர
தகனி, கவுரி பவதி பகவதி பயி ரவி,சுவி

சடிலதரி, அநுபவை, உமை, திரிபுரை
சகல புவனமும் உதவிய பதிவ்ருதை
சமய முதல்வி தனய, பகிரதி சுத சதகோடி

அருண ரவியினும் அழகிய ப்ரபை விடு
கருணை அருணித தநுபர, குருபர
அருணை நகர் உறை சரவண, குரவு அணி புய வேளே

அடவி சரர் குல மரகத வனிதையும்
அமரர் குமரியும் அனவரதமும்
அழகு பெற நிலை பெற வரம் அருளிய பெருமாளே.

(458) செகசருட்டி (7½) 458 -1½+2+4

குமரி காளி வராகி மகேசுரி
கவுரி மோடி, சுராரி, நிராபரி
கொடிய சூலி சுடாரணி யாமளி மகமாயி

என்றும் இளமையொடு கூடியதாய், நூறு இதழ் தாமரை போல்வதாய்
நறுமணம் வீசுவதாய், சிலம்பு அணிந்ததாயுள்ள திருவடிகளை
உடையவள். பொன்மலையாகிய மேருவை வில்லாக ஏந்தினவள்.
திரிபுரங்களை எரித்தவள். (கவுரி) பொன்னிறமுடையவள். (பவதி)
பிறப்பை போக்குபவள். அறுகுணங்களையுடையவள், பைரவியாகத்
தோன்றினவள், சூலம் ஏந்தியவள்

சடை தரித்தவள், போகங்களை நுகர்விப்பவள். உமை. மூன்று உலகங்
கடக்கும் தேவி. எல்லா உலகங்களையும் ஈன்றருளிய பதிவிரதை.
(பதிவழிபாட்டினையே விரதமாகக் கொண்டவர்) எல்லாச் சமயங்
கடக்கும் முதல்வி ஆகிய பார்வதியின் புதல்வனே! கங்கா தேவியின்
மைந்தனே! நூறு கோடி

சிவந்த சூரியர்களை விட அழகான ஒளி வீசும் கருணை மயமானதும
நல்ல நிறமுடையதுமாகிய திருமேனியை உடையவரே! குருபரனே!
திருவண்ணாமலை நகரில் வீற்றிருக்கும் சரவணனே! குரா மலரைத
தரித்த புயங்களை உடையவனே! யாவராலும் விரும்பப்படுகின்றவனே!

வனத்தில் உலாவுகின்ற வேடர் குலத்துப் பச்சை நிற மங்கை
வள்ளியும், தேவர் குமாரி தேவசேனையும் எப்போதும் பக்கத்தில
அழகு விளங்க நிலைபெற்றிருக்க அவர்களுக்கு வரம் தந்தரு
ளிய பெருமானே.

458

(458) என்றும் இளமையாக இருப்பவள். கருநிறம் உடையவள். வராகியாக விளங்குபவள்
பெரிய செல்வத்தை உடையவள் (சுராரி நிராபரி) தேவர்களுக்குப் பகைவர்க
ளாகிய அசுரர்களை முதன்மை இழக்கச் செய்பவள், உக்ரமான சூலத்தை ஏந்தியவள்
(கவுரி) பொன்னிறம் படைத்தவள். (மோடி) பகைவர்க்கு அச்சத்தை தருபவள்,
(சுபாரி) ஒளி மயத்தவள். பச்சை நிறத்தவள், மகத்தான மாயம் புரிபவள்

குறரு ரூப முராரி சகோதரி
உலக தாரி உதாரி பராபரி
குரு பராரி விகாரி நமோகரி — அபிராமி

சமரநீலி, புராரி தன் நாயகி,
மலை குமாரி, கபாலி, ந(வ)நாரணி,
சலிலமாரி, சிவாய மனோகரி — பரை யோகி

சவுரி, வீரி, முநீர் விட போஜனி
திகிரி மேவு கையாளி, செயாள் ஒரு
சகல வேதமும் ஆயின தாய் உமை — அருள் பாலா

திமிதம் ஆடு சுராரி நிசாசரர்
முடிக(ள்) தோறும் கடாவிடு ஏய் ஒரு
சில பசாசுகள் குலவி நிணம் உண — விடும் வேலா

திரு உலாவு சோணேசர் அணைமலை
முகில் உலாவு விமான நவோநிலை
சிகர மீது குலாவி உலாவிய — பெருமாளே-

வாமனரூபம் கொண்ட திருமாலின் சகோதரி, உலகங்களைத் தாங்கிக் காப்பவள், தயாள குணம் உடையவள், முதன்மை பூண்டவள், குருபரனும் சிவனுக்குக் கண் போன்றவள், வேறு பாடுகளைப் பூண வல்லவள், வணங்கப்படுபவள், பேரழகுள்ளவள்

போரில் வல்ல துர்க்கை, திரிபுரத்தை எரித்தவருடைய பத்தினி, இமயமலையின் புதல்வி, கபாலம் ஏந்தியவள், நல்ல நாரணி, நீர் பொழியும் மழைத் தேவி, சிவ சம்பந்தப்பட்டு விரும்பத்தக்கவள், பராசக்தி, யோகி,

சௌரியம் (பராக்ரமம்) உடையவள், வீரம் உள்ளவள், கடல் விஷத்தை உண்டவள், சக்கரம் ஏந்திய திருக்கரத்தை உடையவள், செம்மை நிறம் உடையவள், ஒப்புற எல்லா வேதங்களுமாய் நிறைந்த அன்னை, உமை (ஆகிய பார்வதி) அருளிய குழந்தையே!

பேரொலி செய்து போராடின, தேவர்களின் பகைவர்களாம், இருள் உலாவும் அரக்கர்களுடைய தலைகள் தோறும (ஆயுதங்கள்) படும்படிச் செலுத்தி வைத்து (ஏயி அங்கு பொருந்தியிருந்த, ஒரு சில பசாசுகள், குணலை என்ற ஒரு வகைக் கூத்து ஆடி, மாமிசங்களை உண்ணும்படி விட்ட வேலனே!

லக்ஷ்மீகரம் பொருந்திய, சோணேசரது அண்ணாமலையில் மேகம் உலாவும் கோயிலில, ஒன்பது நிலைகளையுடைய கோபுரத்தின் உச்சியில் மகிழ்ச்சியுடன் உலாவிய பெருமாளே

குழவியும் ஆய் மோக மோகித குமரனுமாய் வீறு காதலி
குலவனுமாய் நாடு காடொடு — தடுமாறிக்
குனிகொடு கூன் நீடும் ஆகிடு கிழவனுமாய் ஆவி போய் விட
விறகுடனே தானி ஆவதும — அறியாதாய்
பழைய சட் ஆதாரம் மேல் நிகழ், கழி உடல் காண, நிராதர
பரிவு இலி வான நாலு நாள தொறும — நடைமாறி

புலவலம் ஆம் யோக சாதக உடல் கொடு மாயாத போதக
பதி அழியா வீடு போய் இனி — அடைவேனோ

எழு கடல் தீமூள மேருவும் இடிபட வேதாவும் வேதமும்
இரவியும் வாய் வாறி ஓடிட — முது சேடன
இருள் அறு பாதாள லோகமும், இமையமும் நீறுக, வான்கிரி
இரு பிளவாய் வீழ, மாதிர — மலை சாய

அழகிய மா பாகசாதனன அமரரும் வாழ்பூத, மாறு செய
அவுணர் தம் மா சேனை தூள் எழ — விளையாடி

அமரினை மேவாத சூரனை, அமர் செயும் வேலாயுதா, உயர
அருணையில் வாழ் வாத மேவிய — பெருமானே

* வான நாலு -- . பிராண வாயு வெளியே போவது 12 அங்குலம் ; உள்ளே மீள்வது 4 அங்குல வாயுவை உள்ளே செலுத்துவார்

459

(459) குழந்தையாய் இருந்து, பின்பு, மோகத்தையே விரும்பும் குமரப் பருவத்தனாய், வீடு, மனைவி இவைகளுடன் கூடிக் குலவுபவனாய், நாட்டிலும் காட்டிலும் உழன்று தடுமாறுபவனாய், (பின்னர்) [8]

உடல் வளைந்து கூன் பெரிதாய் ஆன கிழவனுமாய், உயிர் நீங்க, (உடல்) விறகுடன் சாம்பற் பொடி ஆவதையும் அறிந்து தாவி

பழமையான ஆறு ஆதாரங்களின் மேல் (திகழ்) காணக்கூடிய, உடம்பு நீங்கின நிலையை அடைந்து, (நிராதர) சாயு வேண்டாததும், (பரிவில்) துன்பமில்லாததுமான, வானவெளியில் நின்று, நாள் தோறும் (நாலு மடை மாறி) வீணே கழியும் நாலங்குலப் பிரமாண வாயுவைக் கழியாது திருப்பி

பலபல விதமான யோகப் பயிற்சிகள் செய்து உடலை வளர்த்து அழிவில்லாத, அறிவு மயமான, இறைவனுடைய அழியாத முத்தி வீட்டை நாடிச் சென்று இனியேனும் சேருவேனோ?

ஏழு கடலும் தீ மூண்டு எரியவும், மேரு மலையும் பொடிபடவும், பிரமனும் வேதங்களும், சூரியனும் இடம் விட்டுப் பெயர்ந்து ஓடவும், பழைய ஆதிசேஷன் (வாழும்) இருளில்லாத பாதாள லோகமும், இமய மலையும் பொடியாகவும், சக்ர வாளகிரி இரண்டு பிளவு பட்டு விழவும், திக்குகளில் உள்ள எட்டு மலைகளும் சாய்ந்து விழவும்

அழகுள்ள சிறந்த இந்திரனும், தேவர்களும், தங்கள் நகரில் குடி புகவும், நீதி நெறிக்கு மாறானதையே செய்கின்ற அசுரர்களுடைய பெரிய சேனை தூள்படவும், திருவிளையாடல் புரிந்து

அமைதியைப் பொருந்தாத சூரர்களோடு போர் புரிந்த வேலாயுதனே! சிறப்பு மிக்க அருணையில் வாழ்வாக வீற்றிருக்கும் பெருமானே.

---

8 அங்குலம் - 4 அங்குலம் வீணாகி விரயமாகின்றது இது வீணாகாமல் யோகியா

460 (16) (ப) [(த½+1½)+(த½+1½) (த½+2+1½+2)] 83

(460) மோகனம்

காணாத தூரம் நீள் நாத வாரி
காதும் ஆரவாரம் அதன் பிறகே
கால் ஆரும் வேளும், ஆல நாதர்
காவாய் நிலாவும் முனிந்து பூமேல்

நாண் ஆன தோகை நூல் ஆடை சோர
நாபோர்கள் ஏச அழிந்து தானே
நாணுவதாம் மேலாக ஆகம்
நாள் தோறும் வாடி மயங்கலாமோ
சோண(அ)சல ஈச, பூண ஆரம நீடு
தோளா ஆறும் ஆறும விளங்கு நாதா
தோலாத வீர, வேலால் அடாத
சூரானன் மாள வெகுண்ட கோவே
சேண் நாடர் லோகம் வாழ மாது யானை
தீராத காதல் சிறந்த மார்பா
தேவாதி கூடு மூவாது மூவர்
தேவாதி தேவர்கள் தம்பிரானே

(461) திலங் 461 (8) (ப) (2+1½+1½+3)
கீத விநோத மெச்சு குரவாலே
கீறு மையாா முடித்த குழலாலே

(460) கண்ணுக்கு எட்டாத தூரம் பரந்ததாய், (நீள்) பெரிய ஒலி
கொண்டதாய் உள்ள கடலின, கொல்வது போலச் செய்யப்படுமே
ஆடம்பரமும், அதன் பின்பாக
(தென்றல்) காற்றைத் நேராகக் கொண்ட மன்மதனும், ஆலகால விஷத்தை
உண்ட நாதர் சிவபெருமானுடைய காலால் தேய்க்கப்பட்ட நிலாவும்
கோபிக்க, இந்தப் பூமியின மேல
நாணம் கொண்ட மயில் போன்ற இப் பெண், நூலால் ஆன ஆடை
நெகிழ, நாட்டில் உள்ளோர் பழித்துப் பேச, உள்ளம் அழிந்து அதனால்
பலவித அபவாதங்கள (அவதூறு) மேலெழுந்து வெளிபட, உடல்
தினந்தோறும் வாடி மயக்கம் அடையலாமோ?
சிவந்த மலையாகிய திருவண்ணாமலை ரசனே! அணிந்துள்ள மாலை
கள, நீண்ட பன்னிரு தோள்களிலும் விளங்குகின்ற நாதனே!
தோல்வியில்லாத வீரனே! வேல் கொண்டு தகாத காரியங்களைச்
செய்த சூரன் எனும் ஆண்மையாளன் மாளும்படி கோபித்த தலைவனே!
விண்ணுலகத்தினருடைய உலகில் வாழ்ந்திருந்த மாது தேவயானை
யிடம் முடிவில்லாத அன்பு பூண்ட சிறப்புடைய திருமார்பினரே!
தேவர்கள் ஆதியோர், மூன்றெனக் கூடிய ஆதிமூர்த்திகளாம் மூவர்,
தேவர்கட்குத் தலைவராகிய தேவேந்திரர்கள - இவர்கள் யாவர்க்கும்
தனிய பெருந் தலைவரே!

461

(461) ராக விநோதங்கள அமைந்துள்ளமை பற்றி மெச்சக் கூடிய
குரலின் இனிமை கண்டும
வகிர்ந்து வாரப்பட்டதும் கருநிறம் நிறைந்ததும முடிபோடப்பட்ட
தமான கூந்தலைக் கண்டும (மயங்கி)

நீதி கிலாது அழித்தும	உழலாதே

நீ மயில் ஏறி உறறு	வரவேணும்

சுது அம்ர சுரர் உடகய	வொரு சூரா

சோணகிரியில் உற்ற	குமரேசா

ஆரியா காது அருச் சொல்	அருள்வோனே

ஆனகுகாா கனிட்ட	பெருமானே

(462) ஆபோகி (8) 462 ஆதி

சிவ மாது (உ)டனே அநுபோகம் அது ஆய்
சிவஞான அமுதே	பசிஆறித்
திகழ்வோடு இருவோர் ஒருரூபமதாய்
திசை லோகம் எலாம்	அநுபோகி

இவனே என, மால் அயனோடு அமரோர்
இளையோன் எனவே	மறை ஓத

இறையோன் இடமாய் விளையாடுகவே
இயல் வேலுடன் மா	அருள்வாயே
தவ லோகம் எலாம முறையோ எனவே
தழல் வேல கொடுபோய	அசுரரை
தலை தாள்பட, ஏழ் கடல் தூளபட மா
தவம் வாழ்ந (உ)றவே	விடுவோனே

நீதி என்பதே இல்லாத வகையில் பொருளையும் நேரத்தையும்
அழித்து உழன்று வீணாகாத வண்ணம்
நீ மயில் மீதேறி திருவுளம் பொருந்தி வர வேண்டுகின்றேன
சுதான எண்ணங்கள் கொண்ட சூரர்கள் அஞ்சும்படிப் போர்செய்த சூரனே,
திரு அண்ணாமலையில் வீற்றிருக்கும் குமரேசனே!
முதற் கடவுளாம் சிவபெருமானுடைய திருச்செவியில் நம்பறற சொல்
லாகிய பிரணவத்தை, உபதேசித்தவனே!
ஆனைமுகத்தவராம் கணபதிக்கு தம்பியாகும் பெருமானே

462

(462) சிவம் எனகின்ற தலைவியுடன் இன்பநுகர்ச்சி கொண்டவனாய,
சிவஞானம் என்ற அமுதத்தை உண்டு அதனால் பசி நீங்கி

விளக்கத்துடன் (திருவோர் : சிவமாகிய தலைவி, ஆன்மாவாகிய தலைவன்
நானும் தலைவியும் ஒருருபமாய் நன்றி (ஏட்டுத்) திசையில் உன்னோடும்
உலகினர் யாவரும் _ சுகானுபவம் உடையவன
இவன் ஒருவனே என்று வியந்து கூறும்படி, திருமால், பிரமன், தேவர்
யாவரும் 'இவன இளையோன்' (என்றும இளையோன் 'முருகன) என்று
வியந்து கூற, வேதமும அங்ஙனமே எடுத்துக் கூற்
சிவபெருமானிடத்திலே, நான் உன்னைப் போல் விளையாடி மகிழ
அழகிய வேலையும மயிலையும தந்தருளுவாயாக (மா- குதிரை)
(தவ) மிகவும் உலகங்கள் எல்லாம முறையோ என்று ஓலமிட
நெருப்பை வீசும் வேலுடன சென்று அசுரர்களின
தலைகள தாள்படவும், ஏழு கடல்களும் தாள்படவும், சிறந்த தவத்தினர்
வாழ்வுறுமாறும் (அந்த வேலைச்) செலுத்தினவனே